பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 23 வியாழக்கிழமை (06-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:193

# மூத்த தலைவர் சிவசிதம்பரத்தின் புகழுடல் நாளை தரைவழியாக யாழ். எடுத்துவரப்படும்!

## ஞாயிறன்று கரவெட்டியில் இறுதிச்சடங்கு நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்6

**நேற்று அதிகாலை கொழும்பில் காலமான முதுபெரும் அரசியல் தலைவர் 'உடுப்பிட்டிச் சிங்கம்' முருகேசு சிவசிதம்பரம் அவர்களின் புகழுடல் நாளை வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து தரைவழியாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிச்சடங்குகள் அன்னாரின் சொந்தஇடமான கரவெட்டியில் ஞாயிறன்று நடைபெறும்.**

முதுபெரும் அரசியல்வாதியும் தமிழ்மக்களின் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அயராது குரல் எழுப்பியவருமான தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப் பட்டியல் எம்பியான முருகேசு சிவசிதம்பரம் நேற்று அதிகாலை கொழும்பில் காலமானார். கடந்த ஒருவாரகாலமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அன்னார், இறக்கும்போது வயது 79. மயக்க நிலையிலேயே அவரது உயிர் பிரிந்ததாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மூத்த தமிழ் தலைவரான சிவசிதம்பரத்தின் மரணச் செய்தி கேட்டு தமிழ் மக்கள் தீராச் சோகத்தில் மூழ்கியிருக்கின்றனர்.

உடல் தளர்ந்த நிலையில் கடந்த சில மாதங்களாக மீண்டும் அரசியல் பணிகளை மேற்கொண்டு (12ஆம் பக்கம் பார்க்க)



## சிவாவின் மறைவுக்கு அனுதாபம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த தலைவர் எம்.சிவசிதம்பரத்தின் மறைவுக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அமைச்சர்கள் எனப் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஆறுமுகம் தொண்டமான் மற்றும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோர் கொழும்பில் இரங்கல் செய்தி வெளியிட்டனர். தமிழீழ விடுதலை அணி சார்பாக மா.க.ஈழவேந்தனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) சார்பாக அதன் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.சுபத்திரனும் இரங்கல் தெரிவித்துள்ளனர். ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோவும் சென்னையில் அனுதாபச் செய்தி வெளியிட்டுள்ளார்.

## வாழ்க்கைக் குறிப்புகள்...

தலைவர் சிவசிதம்பரம் 1923ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20ஆம் திகதி பிறந்தார். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, கொழும்பு சென்.ஜோசெப் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வியைத் தொடர்ந்தார்.

★ 1948ஆம் ஆண்டு திருமணம். மனைவி சாரதாதேவி. இரு பிள்ளைகள்: மகள் - நிரஞ்சலி, மகன் - சத்தியேந்திரா.

★ சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்று அத்துவக்காத்தாகப் பணிபுரிந்தார். முக்கிய பல வழக்குகளில் ஆஜராகி சாதனைகள் புரிந்தார்.

★ 1956ஆம் ஆண்டு முதன்முதலாக பருத்தித்துறைத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

★ 1960, 1965ஆம் ஆண்டுகளில் உடுப்பிட்டித் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு (12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி அலுவலகங்களில் கறுப்புக்கொடி! சோக கீதம்!!

யாழ்ப்பாணம்,ஜூன்6

தலைவர் முருகேசு சிவசிதம்பரத்தின் மறைவுக்கு அஞ்சலி தெரிவிக்குமுகமாக யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள கூட்டணி அலுவலகத்திலும், நுழைவாயிலிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. தோரணங்களும், வாழைமரங்களும் கட்டப்பட்டுள்ளன. ஒலிபெருக்கியில் சோககீதமும் இசைக்கப்பட்டுவருகின்றது.

நெல்லியடியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் உடுப்பிட்டித் தொகுதி அலுவல (12ஆம் பக்கம் பார்க்க)

## குமரகுருபரன் எம்.பியாக வாய்ப்பு?

கொழும்பு,ஜூன்6

தமிழ்க்கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியாக தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் என்.குமரகுருபரன் நியமிக்கப்படும் சாத்தியம் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த தேர்தலில் கூட்டமைப்பு சமர்ப்பித்த தேசியப் பட்டியலில் முதலிடத்தில் இருந்த எம்.சிவசிதம்பரம் அந்தப் பதவியை ஏற்றிருந்தார்.

இந்தப்பட்டியலில் அவருக்கு அடுத்த இடத்தில் குமரகுருபரன் உள்ளார். அவருக்கே எம்.பி. பதவி கிடைக்கும் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது.

வெற்றிடமாகியுள்ள தேசியப் பட்டியல் எம்.பி. பதவிக்கு புதிதாக ஒருவரை நியமிக்கும் அதிகாரம் கூட்டமைப்பின் செயலருக்கு உள்ளது என்றும் -

கூட்டமைப்பின் தலைவர்கள் கூடி பட்டியலில் உள்ள ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிப்பர் என்றும் -

மற்றொரு தகவல் தெரிவித்தது.

(ஐ-3)

### முச்சந்தி முரளி



மாணவர் சக்தி மாபெரும் சக்தியாய் மாறட்டும்...!

# மீனவர்கள் இன்றுமுதல் மறியல்!

யாழ்ப்பாணம்,ஜூன்6

குடாநாட்டில் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும் என்றும்-

கரையோரப் பகுதிகளில் மீனவர்களின் இருப்பிடங்களில் தங்கியுள்ள படையினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்றும் கோரி கடற்றொழிலாளர்கள் யாழ்.செயலகம் மற்றும் யாழ்.பிரதேச செயலகம் முன்பாக இன்று மறியற்போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கின்றனர்.

இன்று காலை 7 மணிக்கு இந்த மறியற்போராட்டம் ஆரம்பமாகும்.

கோரிக்கைகளுக்கு சரியான பதில் கிடைக்கும்வரை போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் என்று வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

குடாநாட்டில் சகல பகுதிகளையும் சேர்ந்த மீனவர்கள் இன்று தொழிலுக்குச் செல்லாமல் இந்தப்போராட்டத்தில் இணைந்து கொள்வர் என்றும்-

இந்தப் போராட்டத்துக்கு பல பொது அமைப்புக்கள் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன என்றும் -

அவர் தெரிவித்தார்.(ஐ-3-8-10-51-173)

# குடாநாட்டில் இன்று மாணவர் எழுச்சி!

யாழ்ப்பாணம்,ஜூன்6

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம் கல்வி வலயங்களுக்கான எழுச்சி நிகழ்வுகள் முறையே யாழ். மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டு.இந்துக் கல்லூரி மற்றும் உரும்பிராயில் அமைந்துள்ள மாவீரர் பொன்.சிவகுமாரனின் நினைவாலயம் ஆகிய இடங்களில் நடைபெறும்.

இதேவேளை -

தீவகம், தென்மராட்சி கல்வி வலயங்களைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலைகளிலும், யாழ். பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கல்வி நிலையங்களிலும் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறும்.

காலை 9மணிக்கு ஈகச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகும் எழுச்சி நிகழ்வுகளில் தொடர்ந்து அகவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, மாணவர், அதிபர், ஆசிரியர் உரைகள் மற்றும் எழுச்சிநாள் பிரகடனம் வாசித்தல், விருந்தினர் உரை என்பன இடம்பெறும்.

யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள மேற்படி எழுச்சி நிகழ்வுகளில் மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள் பங்குபற்றுவர்.

மாணவர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம் மாணவர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்திக்குறிப்பில்:-

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு வரலாற்று சிறப்புமிக்க நாள் மாணவர் எழுச்சிநாள். இந்நாளை அனுஷ்டிப்பதையிட்டு தமிழீழ மாண (12ஆம் பக்கம் பார்க்க)

## நிமால் கொலை விசாரணை:

## ஈ.பி.டி.பியினர் நால்வரை இன்று ஆஜராகப் பணிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்6

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை தொடர்பான விசாரணைக்காக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்டத் துணைப்பொறுப்பாளர் க.மணிபல்லவராஜனையும் (நிஷாந்தன்) மற்றும் மூன்று ஈ.பி.டி.பி. உறுப்பினர்களையும் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். பொலீஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்ற சமயம், கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுத் துறை இன்ஸ்பெக்டர் பி.எச்.டி.ரஞ்சித் டி சில்வா மனு ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அவரின் மனுவை ஏற்றுக்கொண்ட நீதிவான், ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர்களினது விவரங்களையும் கட்சியின் கையிருப்பில் உள்ள ஆயுதங்கள் தொடர்பான விவரங்களையும் (12ஆம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூன்6

பொதுஜன ஐக்கிய முன்னணி இன்று பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் எதிரே ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறது.

தேர்தல் ஊழல்களுக்கும் கட்டணங்கள் உயர்வுகளுக்கும் எதிராக நடத்தப்படும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன தலைமை வகிப்பார்.(ஐ)

## குடாநாட்டில் படை முகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன

குடாநாட்டில் வலிகாமம் பகுதியில் உள்ள படைமுகாம்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

பலாலி வீதியில் ஊரெழு, உரும்பிராய், கோண்டாவில் ஆகிய பகுதிகளிலும் மற்றும் பருத்தித்துறை வீதியிலும் உள்ள முகாம்களைச் சூழ பதுங்குகுழிகள் அமைத்தல், முட்கம்பி அடித்தல் போன்ற பணிகளில் படையினர் ஈடுபட்டிருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. (ஐ-3-133)

## திருமலையிலும் மாணவர் பேரணி

தம்பலகாமம்,ஜூன்6

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று திருகோணமலையில் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி மூன்று பேரணிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

மூன்றாம் கட்டைச் சந்தி, அநுராதபுரம் சந்தி, ஏகாம்பரம் மைதானம் ஆகிய இடங்களில் இருந்து பேரணிகள் புறப்பட்டு புனித சூசையப்பர் கல்லூரி மைதானத்தைச் சென்றடையும். அங்கு எழுச்சிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

# தமிழீழ வைப்பகத்துக்கு பணியாளர் ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்6

தமிழீழ வைப்பகத்தினால் அலுவலர்(பயிலுநர்), கணக்காய்வாளர் (பயிலுநர்) ஆகிய பதவிகளுக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வணிக, முகாமைத்துவ பட்டதாரியாக உள்ளோர் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் எச்.என்.டி.ஏ. கற்கை நெறியில் தேர்ச்சியடைந்தோர் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

32 வயதுக்கு மேற்படாதவர்கள் தங்கள் விண்ணப்பங்களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பணிநிலை வேண்டுகை' எனக் குறிப்பிட்டு எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட அரசியல் துறை அலுவலகம் ஊடாக அனுப்ப வேண்டும் என்று தமிழீழ வைப்பகத்தின் நடுவப் பணியகத்தைச் சேர்ந்த ஆளுகைக்குப் பொறுப்பான மேலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்6

இருபாலை கற்பக விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை காலை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (எ-ரி)

★ ★ ★

வடமராட்சி,ஜூன்6

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் கோயில் மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

கரவை வெல்லன் ஆதீனம் பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ வே.கனக சபைக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (ம-173)

★ ★ ★

தென்புலோலி நறுவிலி அருள் மிகு வைரவர் கோயில் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கோயிலின் திருப்பணி வேலைகள் 12 லட்சம் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (ம-173)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்6

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்ட பசஷ மஹாகும்பாபிஷேகம் நாளை 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6மணி முதல் நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 10மணிமுதல் 5மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை சிவாகம கலாநிதி சிவஸ்ரீ மு.பரமசாமிக் குருக்கள் நிகழ்த்துவார். (எ-ரி)

★ ★ ★

கொக்குவில் - தாவடி வேம்படி முருகமூர்த்தி கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.56 மணி முதல் நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதியும், சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் குருவுமான சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள், யாழ்.இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி ஆகியோர் அருளாசியுரை வழங்குவர். (எ-ரி)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன் வடக்கு துர்க்காதேவி(நாச்சிமார் கோயில்) ஆலய பிராயச்சித்த அபிஷேக நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இந்த ஆலயம் கடந்த 12 வருடங்களாக பூசை வழிபாடுகளின்றிக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-13-69)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்6

கல்வியங்காடு ஞானவைரவர் தேவஸ்தான புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 5.52 மணி முதல் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று காலை 7 மணி முதல் இடம்பெறும்.

சிவாகம கிரியாஜோதி சிவஸ்ரீ பொன். வரதராஜக் குருக்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நிகழ்த்துவார்.

தொடர்ந்து பால பண்டிதர் கலாதரசர்மாவின் சிறப்புச் சொற்பொழிவும், நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரையும் இடம்பெறும். (எ-13)

★ ★ ★

வண்ணை ஐயனார் கோயிலடி ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய புனராவர்ததன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று 10.50 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-13)

## விவசாய பயிற்சி வகுப்புகள்

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு பழப்பயிர்ச் செய்கையில் புதிய முறையில் நாற்றுக்களை உற்பத்தி செய்தல் தொடர்பான பயிற்சியும் -

எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு உயிரியல செறிவான வீட்டுத்தோட்டம் தொடர்பான பயிற்சியும் -

எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக கிழமை காலை 9 மணிக்கு பழப்பயிரில் ஒட்டுதல் மூலம் நாற்றுக்களை உற்பத்தி செய்தல் தொடர்பான பயிற்சியும் இடம்பெறவுள்ளன.

பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளவுள்ள விவசாயிகள் தமது பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்புகொண்டு பெயர் விவரங்களைப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை அறிவித்துள்ளார். (எ-10-8)

# சாயி சிந்தனை



## மனமே நோய்களின் காரணம்

மனது இடைவிடாமல் கண்டவற்றை நினைப்பதால் வியாதிகள் ஏற்படுகின்றன. இதய நோய் என்பது மனத்தின் கோளாறால் நிகழ்வது. கல்லீரல் நோயும் மனம் சம்பந்தப்பட்டதே. சிறுநீரக நோயும் மனம் சம்பந்தப்பட்டது. இவையெல்லாம் மனத்தின் விபரீதத்தால் நிகழ்கின்றன. எப்போதும் சிந்தனை, என்னால் வெற்றியடைய இயலாது, என்னால் மகிழ்ச்சியுடன் இருக்க இயலாது. இவையே பல வியாதிகளுக்கு மூலகாரணம். ஏன் யோசிக்க வேண்டும்? ஏன் கவலைப்படவேண்டும். கவலையின் வடிவம் என்ன? அது மனதால் உருவாக்கப்பட்ட பயம். அது பல வியாதிகளுக்கு இட்டுச் செல்கிறது.

உடலில் உள்ள பல உறுப்புக்கள் மனம் காரணமாக நோய்வாய்ப்பட்டிருக்கின்றன. கவலை என்பது வெறும் கற்பனையே. இதுவே அதிகரித்து அதிகரித்து நோயில் சென்று முடிகிறது.

கடவுள் மேல் பூரண நம்பிக்கை வைத்து சரணாகதி அடைந்தவனுக்கு கவலை என்பதே இல்லை. கவலை இல்லாதவனுக்கு நோயும் இல்லை. நீ இறைவனை நேசித்தால் நீ வெற்றி பெறுவதற்கு அவர் ஏற்பாடு செய்வார். நீ ஸ்வரத்துடன் மந்திரங்களைக் கூறுவதன் மூலமும் மறை நூல்களைப் படிப்பதன் மூலமும் சாந்தி கிடைப்பதில்லை. 'தெய்வீக அன்பு' நிறைந்த ஓர் எண்ணமே மாற்றவல்ல மருந்தாகிறது.

கோகுலத்து கோபிகைகள் என்ன புத்தகம் படித்தனர்? என்ன தவம் செய்தனர்? அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் தம்மை இறைவனுக்கு அர்பணித்துக்கொண்டனர். அவர்கள் பரிபூரண சாந்தியடைந்தனர். அவர்களுக்கு கவலை சிறிதும் இல்லை.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (எ-3)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் 19வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் வி.கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி வி.கழகம் மோதவுள்ளது. (எ-ரி)

★ ★ ★

யாழ்.மாவட்ட செயலக நலன் புரிச் சங்கத்தால் நடத்தப்பட்டு வந்த அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 9ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் செயலக திட்டப் பணிப்பாளர் செ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும், மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் செ. கமலநாதன், மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

இறுதி ஆட்டத்தில் யாழ். செயலக உத்தியோகத்தர் அணியை எதிர்த்து யாழ். போதனா வைத்திய சாலை உத்தியோகத்தர் அணி மோதும். (எ-ரி)

★ ★ ★

வடக்கு-கிழக்கு மாகாண சபையால் நடத்தப்பட்டுவரும் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் வலைப்பந்தாட்டம், ஆண்களுக்கான கிரிக்கெட் ஆகியன எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற யாழ் அணிகள் நாளை அங்கு செல்லவிருக்கின்றன. (ம-3-ரி-86)

## ரஜரட்ட பல்கலை பிக்கு மாணவர்குழு இன்று யாழ். வரும்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் சமாதான நல்லெண்ணத்தைப் பகிர்ந்துகொள்ளும் வகையில் தென்பகுதியைச் சேர்ந்த ரஜரட்ட பல்கலைக்கழகத்தை சேர்ந்த பிக்கு மாணவர் குழு இன்று யாழ் பல்கலைக் கழகத்துக்கு வருகைதரவுள்ளது.

சுமார் 50பேர் அடங்கிய இக்குழுவுடன் மேற்படி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இருவரும் வருகை தரவுள்ளனர்.

மேற்படி குழுவினர் யாழ். பல்கலைக்கழக மாணவர் மன்றப் பிரதிநிதிகளைச் சந்தித்து இன்றைய சமாதான சூழ்நிலைகள் பற்றி கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## நம்புங்கள் மாணவர்களே!

நம்புங்கள் மாணவர்களே!
நாளை விடியும்
நாடுங்கள் மாணவர்களே
நாடு வரவேற்கும்

எழுங்கள் மாணவர்களே
எம்நாடு வாழ்த்தும்
எழுதுங்கள் மாணவர்களே
எழில்நாடு வணங்கும்

நிமிருங்கள் மாணவர்களே
நன்நிலம் நிமிரும்
குவியுங்கள் மாணவர்களே
கொள்கை நிலைக்கும்

கூடுங்கள் மாணவர்களே
கொடுமைகள் மறையும்
தேடுங்கள் மாணவர்களே
தேசம் கதைக்கும்

- தமிழீழக் கவிராயர்.

(இன்று மாணவர் எழுச்சி தினம்)

ஜப்பான் தென்கொரியா

# உலகக் கிண்ண கால்பந்து




31.05.02 - 30.06.02



ரஷ்ய வீரர் ரஸ்லன் பிமோனோவ் காற்றில் எம்பி பந்தை உதைக்கும் காட்சி.

# போர்த்துக்கலுக்கு எதிராக அமெரிக்கா பெரு வெற்றி!

சியோல்,ஜூன்6

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் நேற்று நடந்த மூன்று ஆட்டங்களில் இரண்டில் ரஷ்யா, அமெரிக்கா அணிகள் வெற்றிபெற்றன. ஓர் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. போர்த்துக்கலுடனான ஆட்டத்தில் அமெரிக்க அணி அதிர்ச்சி ஏற்படுத்தத்தக்க வகையில் சிறப்பாக ஆடி வெற்றிபெற்றது.

முதலாவது ஆட்டம் ரஷ்யா - ருனிஷியா அணிகளுக்கு இடையே ஜப்பானின் கோப் மைதானத்தில் இடம்பெற்றது. ரஷ்யா 2 கோல்கள் வித்தியாசத்தில் ருனிஷிய அணியைத் தோற்கடித்தது.

ரஷ்யாவின் இகோர் ரிற்டோவ் மற்றும் வலறி ஹார்பின் ஆகியோர் தமது அணிக்காக கோல்களை அடித்தனர். ஆட்டத்தின் 59ஆவது நிமிடத்தில் ரிற்டோவ் மிகச் சரியாக- வேகமாக - அடித்த பந்து சீறிச் சென்று கோல்கம்பங்களிலிருந்து சில அங்குல வித்தியாசத்தில் உள்ளே புகுந்து கோலானது. முன்னதாக, ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் ருனிஷிய அணிக்கு கிடைத்த கோல் அடிக்கும் சந்தர்ப்பத்தை அந்த அணிவீரர் பிஸாரே தவறவிட்டார். தொடர்ந்து கிடைத்த பல சந்தர்ப்பங்களையும் அந்த அணி சரிவரப் பயன்படுத்தவில்லை.

முதலாவது கோல் அடிக்கப்பட்ட 5நிமிடங்களில் ருனிஷிய அணி வீரர் ஜெய்டி தப்பாட்டம் ஆடியதால் ரஷ்ய அணிக்கு பெனால்டி உதை வாய்ப்பு வழங்கப்பட்டது. அதனைச் சரியாகப்பயன்படுத்திய ஹார்பின் மேலும் ஒரு கோலை அடித்து அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். இறுதியில் 2-0 என்ற கோல் அடிப்படையில் ரஷ்ய அணி வென்றது.

போர்த்துக்கலுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நடந்த மற்றோர் ஆட்டத்தில் எதிர்பாராத விதமாக அமெரிக்க அணி வெற்றிபெற்றது. இந்த உலகக் கிண்ண ஆரம்ப ஆட்டத்தில் பிரான்ஸ் அணியை செனகல் அணி வென்றது போன்ற ஒரு நிகழ்வாக இது அமைந்தது. 3-2 என்ற கோல் அடிப்படையில் அமெரிக்கா போர்த்துக்கல் அணியை வென்றது.

ஆட்டம் ஆரம்பித்த 36நிமிடங்களுக்குள் எவரும் எதிர்பாராத விதமாக அமெரிக்க அணிவீரர்கள் 3கோல்களை அடித்தனர். அதுவரை போர்த்துக்கல் அணி எந்த ஒரு கோலையும் அடிக்கவில்லை. ஆட்டத்தின் 4, 29, 36ஆவது நிமிடங்களில் அமெரிக்க அணி வீரர்கள் ஜோன் ஓ-பிரின், ஜோர்ஜ் கொஸ்ரா, பிரெய்ன் மக் பிரிட்ஜ் ஆகியோர் தொடர்ந்து கோல்களை அடித்தனர். 39ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணி வீரர் பிற்றோ தன் அணி சார்பில் ஒரு கோலை அடித்தார். ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் போர்த்துக்கல் அணி வீரர் ஜேவ் அகோஸ் தனியாக ஆடி ஒரு அபாரமான கோலை அடித்தார். இறுதியில் 2-3என்ற கோல் அடிப்படையில் போர்த்துக்கல் அணி அமெரிக்காவிடம் தோற்றது.

மூன்றாவது ஆட்டத்தில் ஜேர்மனியை எதிர்த்து அயர்லாந்து அணி மோதியது. ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் கோல்ஸ் முதலாவது கோலை அடித்தார். 55ஆவது நிமிடத்தில் ஜேர்மன் அணி வீரர் அடித்த பந்தை அதிர்ஷ்ட வசமாகத் தடுத்ததன் மூலம் ஜேர்மனி இரண்டாவது கோல் அடிப்பதை அயர்லாந்து தடுத்தது. ஆட்டம் முடிவதற்கு சில நிமிடங்களே இருந்த சமயத்தில் - 90ஆவது நிமிடத்தில் - அயர்லாந்து வீரர் ரொப்பீ கீன் திடீரென ஒரு கோலை அடித்து தன் அணியைத் தோல்வியில் இருந்து காப்பாற்றினார்.

இதற்கு முன்னர் சவூதிஅரேபியாவுடன் ஆடிய ஆட்டத்தில் ஜேர்மனி கோல்மழை பெய்து 8-0 என்ற கோல் அடிப் படையில் அந்த அணியை வென்றது குறிப்பிடத்தக்கது. (ம)

## ரிவால்டோவுக்கு அபராதம்!

சியோல்,ஜூன்6

துருக்கியுடனான ஆட்டத்தின் ஒரு கட்டத்தில் தான் மிக மோசமாகத் தாக்கப்பட்டதாக நடித்து நடுவரை முட்டாளாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பிரேஸில் வீரர் ரிவால்டோவுக்கு உதைபந்தாட்டச் சம்மேளனம் 7ஆயிரத்து 350 டொலர் அபராதம் விதித்துள்ளது.

அந்த ஆட்டத்தின் போது தனது முகத்தில் பலமான அடி விழாத போதும் தான் மிகையாக நடித்ததாக விசாரணைகளின் போது ரிவால்டோ ஏற்றுக்கொண்டார். இதனை அடுத்து அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இந்தக் குற்றத்துக்காக அவர் உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆடமுடியாதவாறு தடுக்கப்படலாம் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. (ம)

## இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜூன்6

உலகக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம்(உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

★ டென்மார்க் எதிர் செனகல் (கொரியா - பகல் 12.30)

★ கெமரூன் எதிர் சவூதி அரேபியா(ஜப்பான் - பகல் 3.00)

★ பிரான்ஸ் எதிர் உருகுவே (ஜப்பான் - மாலை 5.30) (ம)

# தீவிரவாதிகளை கொன்றொழிக்க அமெரிக்கா ரகசியபடை அமைத்தது!

## சட்டங்களுக்கு உட்படாது சி.ஐ.ஏயின் கீழ் செயற்படும்

வாஷிங்ரன்,ஜூன்6

**உலகளாவிய ரீதியில் தீவிரவாதிகளை சட்ட திட்டங்களுக்கு உட்படாத செயற்பாடுகள் மூலம் அழிப்பதற்காக இரகசியப் படை ஒன்றை அமெரிக்காவின் உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. உருவாக்கி உள்ளதாக இணையத் தள செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.**

அமெரிக்காவின் உலக வர்த்தக மையம் மற்றும்பென்டகன் ஆகியவற்றின் மீது விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து தீவிரவாதத்துக்கு


சிதைந்து போன உலகமையக்கட்டடம்

எதிராக எனக்கூறி பல்வேறு நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது.

அமெரிக்காவின் நலன்களுக்கு ஆபத்து விளைவிப்பவர்களை ரகசிய நடவடிக்கைகள் மூலம் கொல்வதற்கு சி.ஐ.ஏக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குவதாக அதிபர் புஷ் அறிவித்திருந்தது அந்த நடவடிக்கைகளில் ஒன்று. இதன் தொடர்ச்சியாகவே இரகசியப்படை அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போரை தோழமை நாடுகளின் துணையுடன் அமெரிக்கா ஆரம்பித்த போதும், இஸ்லாமியத் தீவிரவாதியான ஒஸாமா பின்லேடன், தலிபான் தலைவர் முல்லா ஒமர் ஆகியோரை கண்டுபிடிக்கவோ, ஒழிக்கவோ முடியாது திணறுகிறது.

அறிவிக்கப்பட்ட போர் மூலம் பின்லேடன் போன்ற தீவிரவாதிகளை ஒழிக்க முடியாது என்று அமெரிக்கா இப்போது நன்குணர்ந்துள்ளதாகவும் -

இதனாலேயே, தீவிரவாதிகளை கண்டுபிடித்து அழிப்பதற்காக இரகசியப்படை ஒன்றை உருவாக்கி உள்ளதாகவும் -

இணையத் தளச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சி.ஐ.ஏயின் ரகசிய நடவடிக்கைகளுக்காக பல தனிப்படைகள் உள்ளன. ஆனால், தற்போது உருவாக்கப்பட்டுள்ள தனிப்படைக்கு அதிக வசதிகளும் முன்னுரிமைகளும் வழங்கப்பட்டுள்ளதாக சி.ஐ.ஏ. வட்டாரங்களை மேற்கோள்காட்டி இணையத் தளம் தெரிவித்தது.

சி.ஐ.ஏயின் தீவிரவாத எதிர்ப்பு மையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் புதிய படையில் அங்கம் வகிப்போர் மற்றும் ஆயுதபலம் உட்பட சகல விடயங்களும் ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் பரம வைரியாகக் கருதப்படும் கியூப அதிபர் பிடல் காஸ்ட்ரோவை கொல்வதற்கு சி.ஐ.ஏ. பலதடவைகள் முயன்றதாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன இந்த நிலையில புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இரகசிய படை, தீவிரவாதிகளைக் கொல்வதுடன் நின்றுகொள்ளுமா? அல்லது அமெரிக்காவின் சுயநல நோக்கங்களுக்காக படுகொலைகளிலும் ஈடுபடுமா? என்பது பற்றி இப்போது பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன. (ஒ)

## சைத்தாபேட்டையில் மறுவாக்குப் பதிவு

சென்னை,ஜூன்6

தமிழகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடைத்தேர்தல் நடைபெற்ற சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் 58 வாக்குச் சாவடிகளில் இன்று மறுவாக்குப் பதிவு நடத்தும்படி தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் மோசடி முறைப்பாடுகளால் இங்கு வாக்கு எண்ணிக்கை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ஒ)

## தமது உளவு நிறுவனங்கள் பற்றி அமெரிக்க காங்கிரஸ் விசாரணை

வாஷிங்ரன்,ஜூன்6

அமெரிக்காவில் இடம்பெற்ற செப்ரெம்பர் - 11 விமானத் தற்கொலைத் தாக்குதல்களை தடுக்க அமெரிக்க. உளவு அமைப்புகள் தவறியது பற்றிய விசாரணைகளை அமெரிக்கக் காங்கிரஸ் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது.

தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே கிடைத்த உளவுத் தகவல்கள் உதாசீனப்படுத்தப்பட்டமை, உளவு அமைப்புகளின் ரகசியங்கள் வெளியில் கசிந்தமை போன்ற காரணங்களாலேயே பாரிய அனர்த்தத்தை அமெரிக்க அரசின் உளவு அமைப்புகள் தடுக்கத் தவறியதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்க செனட் மற்றும் பிரதிநிதிகள் சபை ஆகியவற்றில் நிபுணத்துவக்குழுவினர் மேற்படி இரகசிய விசாரணைகளை நேற்றுமுன்தினம் முதல் மேற்கொண்டுள்ளனர். செப்ரெம்பர் 11 அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்திவிட்டு அவர்கள் தமது விசாரணைகளை ஆரம்பித்தனர்.

எவ்.பி.ஐ. மற்றும் சி.ஐ.ஏ. உட்பட அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் விமானத் தற்கொலைத் தாக்குதல் குறித்து என்ன தகவல்களை எப்போது பெற்றன? அதனையடுத்து என்ன தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன? எதிர்காலத்தில் தீவிரவாதத் தாக்குதல்களைத் தடுப்பது எப்படி? என்பது போன்ற கேள்விகளின் அடிப்படையில் விசாரணைகள் நடக்குமென செனட்டர் பார்பரா மிகுல்ஸ்கி தெரிவித்தார். (ஒ)

## தீவிரவாதத்தைத் தடுப்பதில் பாகிஸ்தானுடன் இணைந்து பணியாற்ற இந்தியா தயார்!

### பிரதமர் வாஜ்பாய் திடீர் அறிவிப்பு

புதுடில்லி,ஜூன்6

காஷ்மீரின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பாகிஸ்தானுடன் இணைந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும் திட்டம் குறித்து பரிசீலிக்க உள்ளதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். இதனால் இரு நாடுகளிடையேயான பதற்ற நிலை குறைந்து, இரு தலைவர்களும் பேச்சுக்களைத் தொடங்கும் வாய்ப்புக் குறித்த நம்பிக்கை நீண்ட காலத்தின் பின்னர் முதன்முறையாகத் தோன்றியுள்ளது.

உலக அரங்கில்

காஷ்மீர்த் தீவிரவாதிகள் ஊடுருவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் பாகிஸ்தானிய இராணுவத்துடன் இந்தியப் படையினர் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆலோசிப்பதாக பிரதமர் வாஜ்பாய், கஜக்ஸ்தான் மாநாட்டில் அதிபர் முஷாரப் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தும்படி ரஷ்ய அதிபர் புடின் உட்பட உலகத் தலைவர்கள் பலரும் விடுத்த வேண்டுகோள்களை நிராகரித்து வரும் வாஜ்பாய், பாகிஸ்தானுடன் இந்தியா இணைந்து பணியாற்றும் என்று கூறியிருப்பது, இரு நாடுகளிடையேயான பதற்றம் தணியும் சாத்தியம் ஏற்பட்டதை எடுத்துக் காட்டுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கஜக்ஸ்தானில் பிராந்திய பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்ளும் சமயத்தில் அதிபர் முஷாரப் மற்றும் பிரதமர் வாஜ்பாய் இடையே ரகசிய சந்திப்புக்கு ரஷ்ய அதிபர் புடினும், சீன அதிபர் ஜியாங் ஜெமினும் ஏற்பாடு செய்வதாக முன்னர் செய்திகள் கசிந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### இஸ்ரேலில் தற்கொலைத் தாக்குதல்!

டெல்அவிவ்,ஜூன்6

இஸ்ரேலின் வடபகுதியில் நேற்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 16பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

வெடிபொருள்கள் நிரப்பப்பட்ட வான் ஒன்றைச் செலுத்தி வந்த தற்




கொலைத் தாக்குதலாளி பயணிகள் பஸ்மீது மோதி தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இதில் இறந்தவர்களில் இஸ்ரேலியப் படையினரும் அடங்குவர்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற சிறிது நேரத்தில் இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் ஜெனினில் உள்ள பலஸ்தீன அகதி முகாம் மீது தாக்குதல் நடத்தின. (ஒ)

## 'வேலைக்கு போ' என்ற மாமியை குத்திக் கொன்றார் மருமகன்!

### தமிழகத்தில் சம்பவம்

சென்னை,ஜூன்6

வீட்டில் சோம்பி இருக்காமல் வேலைக்குச் சென்று சம்பாதிக்கும்படி அறிவுரை கூறிய மாமியாரை மருமகன் கத்தியால் குத்திக் கொன்றார்.

தமிழகத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

சென்னை அருகே உள்ள திருவொற்றியூரைச் சேர்ந்தவர் விஜயலட்சுமி, இவரது மகளான சுமதியின் கணவர் காந்தி. சுமதி இட்லி வியாபாரம் செய்து வந்தார்.

காந்தி வேலைக்குச் செல்லாமல் வீட்டில் தங்கி மனைவியின் உழைப்பில் காலம் தள்ளி வந்தார் இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். 2 பிள்ளைகள் பிறந்த பிறகும் பொறுப்பில்லாமல் இருப்பதாக மாமியார் விஜயலட்சுமி மருமகனை அடிக்கடி கடிந்துகொள்வாராம். இதனால் மாமியார் மீது காந்தி கோபம் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் விஜயலட்சுமி வீட்டில் தனியாக இருந்த போது அவரிடம்கைச் செலவுக்கு பணம் கேட்டார் காந்தி. அதற்கு விஜயலட்சுமி மறுத்தார்.

இதனால், ஆத்திரமடைந்த காந்தி மாமியாரைச் சரமாரியாகக் கத்தியால் குத்தியதோடு, நாற்காலியால் தலையிலும் தாக்கினார். இதில் விஜயலட்சுமி உயிரிழந்தார். (ஒ)

## பலஸ்தீனரை ஆதரித்த பிரிட்டிஷ் பெண்மணி இஸ்ரேலில் கைது!

லண்டன்,ஜூன்6

பலஸ்தீன முகாமில் மனிதக் கேடயமாக செயற்பட்ட பிரிட்டிஷ் பெண்விரிவுரையாளரை குற்றச்சாட்


ஜோஸி சன்டர்கொக

டுகள் எதுவும் கூறாமல் இஸ்ரேலிய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பிரிட்டனின் பிர்மிங்காம் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் ஜோஸி சன்டர்கொக் என்ற இந்தப் பெண்மணி பலஸ்தீனர்கள் அனுபவிக்கும் துன்பங்களால் மனம் வருந்தியதாகவும் -

அதனால் அவர் நப்லஸ் அருகே உள்ள பலடா என்ற இடத்துக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்ததாகவும் - கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்ற இஸ்ரேலிய அதிகாரிகள் காரணம் கூறாமல் அவரைக் கைது செய்தனர்.

அவருடன் பணியாற்றும் - பிரிட்டனில் உள்ள - டாக்டர் அமண்டா போல் கூறுகையில்,

கைது செய்யப்பட்ட பின்னர் ஜோஸி தன்னுடன் தொலைபேசியில தொடர்பு கொண்டதாகவும் -

சட்டவிரோதமாக கைது செய்ததைக் கண்டித்து தான் உண்ணாவிரதம் இருப்பதாக அப்போது ஜோஸி தெரிவித்ததாகவும் -

கூறியுள்ளார். (ஒ)

### தவறான விளம்பரத்தால் இழப்பீடு

தவறான விளம்பரம் ஒன்றை வெளியிட்டதற்காக 'மெக் டொனால்ட்' நிறுவனம் ஒருகோடி டொலர்களை பல்வேறு இந்துமத மற்றும் சமூக அமைப்புகளுக்கு வழங்கியுள்ளது.

தாம் தயாரித்த சில உணவுப் பதார்த்தங்களை சைவ உணவு என்று தவறாக விளம்பரப்படுத்தியதாலேயே இந்த இழப்பீட்டை அந்த நிறுவனம் வழங்க நேரிட்டுள்ளது. அந்த உணவுப் பதார்த்தங்களில் மாமிச சத்துக்கள் சேர்க்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## அல்மாட்டி மாநாட்டில் வாஜ்பாயுடன் கை குலுக்காதது குறித்து முஷாரப் விளக்கம்

அல்மாட்டி,ஜூன்6

கஜக்ஸ்தானில் இடம்பெற்ற மாநாட்டில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பும் சுமார் 5 மீட்டர்கள் இடைவெளியில் அமர்ந்திருந்த போதும் இருவரும் பேசிக்கொள்ளவில்லை.


மாநாட்டில் பங்குபற்றிய தலைவர்களில் சிலர்

கடந்த ஜனவரி மாதம் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் நிலவிய போதும் அப்போது இடம்பெற்ற 'சார்க்' மாநாட்டில் பிரதமர் வாஜ்பாயுடன் வலியச் சென்று கைகுலுக்கி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார் அதிபர் முஷாரப். இது தொடர்பாக அல்மாட்டியில் செய்தியாளர்கள் கேட்டபோது,

" 'சார்க்' மாநாட்டில் நானாகச் சென்று வாஜ்பாயுடன் கை குலுக்கினேன். இந்தத் தடவை அவர் வந்து கை குலுக்குவார் என்று எதிர்பார்த்தேன் ஆனால் அவர் ஏமாற்றத்தை அளித்து விட்டார்" என்று அதிபர் முஷாரப் தெரிவித்தார்.

### உடன்படிக்கையின் சில ஷரத்துக்களை பயன்படுத்தி படையினர் தடைவிதிக்கின்றனர்

# மீன்பிடிக் கட்டுப்பாடுகள் தொடர்பாக அதிகாரிகளுடன் பேசி வருகின்றோம்

## கண்காணிப்புக்குழு உறுப்பினர் 'உதயனு'க்குத் தகவல்!

யாழ்ப்பாணம்,ஜூன்6

**புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள சில ஷரத்துக்களைப் பாவித்து மீன்பிடிப்பதற்கு கடற்படையினர் கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். இது விடயமாக உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். மீனவர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்யும் நிலை விரைவில் ஏற்படும் என நம்புகிறோம்.**

**யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். பிரதேச பதில் தலைவர் ஜோஹான் பக்லண்ட் இப்படிக் கூறினார்.**

குடாநாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து அவரிடம் கேட்ட சமயமே அவர் மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டின் கரையோரம் தொடர்பான பிரச்சினையே பெரும் சிக்கலானதாக அமைந்துள்ளது. கண்காணிப்புக்குழுவின் இரு பிரதிநிதிகள் கடந்த சில தினங்களாகப் பருத்தித்துறையில் மீனவர்களுடனும் படை அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றார்கள்.

புரிந்துணர்வு உடன்பாட்டில் படைமுகாம் சுற்றாடலில் ஒருமைல் தூரத்துக்கு மீன்பிடிக்க அனுமதிக்க முடியாது என்று ஷரத்துக்கள் கூறுகின்றன. இந்தச் ஷரத்துக்களின் பிரகாரம், மீன்பிடிப்பதற்குப் பல கட்டுப்பாடுகளைப் படையினர் விதிக்கின்றனர்.

கடலோரத்தில் உள்ள எந்த முகாம் சுற்றாடலில் இந்த ஷரத்துக்களைப் பயன்படுத்த முடியும் என்பதை இனங்காண வேண்டியுள்ளது. கடலோரத்தில் உள்ள சகல முகாம்களிலும் இந்தச் ஷரத்துக்கள் பாவிக்கப்பட்டால் சுதந்திரமான மீன்பிடி இடம்பெற வாய்ப்பு இல்லை என்றே நான் கருதுகிறேன்.

மீனவர்கள் சுதந்திரமாகத் தமது தொழிலை ஏற்படுத்தக்கூடிய வழிமுறைகள் குறித்து தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றோம் - என்றார்.

கண்காணிப்பு அலுவலகம் முன் மீனவர்கள் நடத்த உள்ள மறியற் போராட்டம் பற்றிக் கேட்டதற்கு அவர் கூறியதாவது:-

எமது அலுவலகம் முன் மறியற் போராட்டம் நடத்தி எம்மைக் கட்டிப் போடுவதால் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை. மக்களுக்குச் சேவை செய்யவே நாம் வந்துள்ளோம். எம்மை சேவை செய்ய அனுமதித்தாலேயே எம்மால் மக்களுக்கான பிரச்சினைகள் குறித்து நடவடிக்கை எடுக்க முடியும் - என்றார்.

(ம-3)

## தமது முகாம்களைப் படையினர் பலப்படுத்துவது கவலையளிக்கிறது

யாழ்ப்பாணம்,ஜூன்6

யுத்தநிறுத்தம் நடைமுறையில் உள்ள நேரத்தில் படையினர் புதிய முகாம்களை அமைப்பதும் ஏற்கனவே இருக்கும் முகாம்களைப் பலப்படுத்துவதும் புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் நடவடிக்கையாகப்படவில்லையா என்று ஜோஹான் பக்லண்டிடம் கேட்டதற்கு,

யுத்தநிறுத்தம் நடைமுறையில் உள்ள நேரத்தில், முகாம்களைப் பலப்படுத்துவது, ஆயுதங்களை இடமாற்றுவது போன்ற செயல்கள் இடம்பெறக் கூடாது என்பதே நியதியாகும்.

ஆனால், குடாநாட்டில் இராணுவதினரும் கடற்படையினரும் படை நடவடிக்கைக்கான ஏற்பாடுகள் போன்று தோன்றும் செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இது நல்ல விடயமல்ல; நம்பிக்கைக்குரியதுமல்ல. சமாதானம் குறித்த கவலையை இது ஏற்படுத்துகின்றது - என்றார்.

விடுதலைப் புலிகள் தீவகம் செல்வதில் உள்ள தடைகள் குறித்து அவர் தெரிவித்ததாவது:-

கண்காணிப்புக் குழுத் தலைவர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் கடற்படை அதிகாரிகளுடன் இந்த விடயம் குறித்துக் கலந்துரையாடியுள்ளார். தீவகத்துக்கு நேரில் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டார். இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை அவர் தற்போது மேற்கொண்டுள்ளார் - என்று தெரிவித்தார்.

(ம-3)

## மிதிபலகையில் பயணிக்கத்தடை

யாழ்ப்பாணம்,ஜூன்6

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளில் மிதிபலகையில் நின்றவாறு பயணம் செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் எவரும் மிதிபலகையில் நின்று பயணம் செய்ய அனுமதிக்க வேண்டாம் என சபை பஸ் வண்டிகளில் கடமை புரியும் சாரதிகள், நடத்துநர்களுக்கு அறிவுறுத்தல வழங்கியுள்ளது.

மிதிபலகையில் நின்றவாறு பயணிகள் பயணம் செய்ய அனுமதித்தால் சாரதிகள், நடத்துநர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-173)

## நீதிபதிகளை 3 மணிநேரம் காக்கவைத்த ஜனாதிபதி

கொழும்பு,ஜூன்6

நேரத்தைச் சரிவரக் கடைப் பிடிக்காதவரெனக் குற்றஞ்சாட்டப்படும் ஜனாதிபதி சந்திரிகா நீதிபதிகளை மூன்றுமணிநேரம் காக்கவைத்த சம்பவம் கடந்த புதனன்று இடம்பெற்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் மேல்நீதிமன்றம் ஆகியவற்றுக்கு நியமிக்கப்பட்ட நீதிபதிகள் பதவிப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வுக்குத் தாமதமாக வந்ததன் மூலமே ஜனாதிபதி அவர்களைக் காக்கவைத்தார் என்று கூறப்பட்டது.

குறிப்பிட்ட நிகழ்வு பகல் 12.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. பதவியேற்க இருந்த நீதிபதிகள், அவர்களது குடும்பத்தினர், நீதிமன்ற உயர் அதிகாரிகள் மற்றும் நிகழ்வுக்கு வந்த நீதிபதிகள் அனைவரும் முன்கூட்டியே வந்து ஜனாதிபதிக்காகக் காத்திருந்தனர். ஆனால், ஜனாதிபதி பிற்பகல் 3.15 மணிக்கே நிகழ்வுக்கு வருகை தந்தார் என்று கூறப்பட்டது.

இதேவேளை -

அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி அதிபர் புஷ்ஷை சந்திக்க நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது எனினும் ஜனாதிபதி குறிப்பிட்ட நேரத்தில் அங்கு செல்லாததனால் அந்தச் சந்திப்பு நடைபெறவில்லை என்று தற்போது தெரிவிக்கப்படுகிறது.(ம)

## இடைநிலைக் கல்வியை ஆங்கிலமொழியில் கற்பிப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி

மண்டைதீவு,ஜூன்6

தற்பொழுது தமிழ், சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் தாய மொழி மூலம் கற்பிக்கப்பட்டு வரும் பாடநெறிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சில பாட நெறிகளை ஆங்கில மொழி மூலம் போதிப்பதற்கான ஏற்பாடுகளை மனிதவள அபிவிருத்தி, கல்விப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தத் திட்டம் "தேசிய நட்புறவுப் பாடசாலைச் செயற்றிட்டத்தின்" மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

போதிய வளங்களையும் ஆளணியினரையும் தன்னகத்தே கொண்ட பாடசாலைகள் இச் செயற்றிட்டத்தில் உள்ளீர்க்கப்படவுள்ளன.

இந்தச் செற்றிட்டத்தின் கீழ், சகல இனங்களையும் சேர்ந்த மாணவர்கள் ஒரே வகுப்பறையில் இருந்து ஆங்கில மொழி மூலம் கற்பதற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி அதன்மூலம் இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வை ஏற்படுத்தவும் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளின் திறன்களை விருத்தி செய்யலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலை மாணவிடையே தேசிய ஒற்றுமை, சகவாழ்வு போன்ற உயர்ந்த விழுமியங்களை முன்னேற்றும் நோக்கில் கடந்த ஆண்டு தரம் ஆறில் ஆரம்பிக்கப்பட்ட முன்னோடித் திட்டத்தைத் தொடர்ந்தும் பரவலாக்கம் செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஆறாந்தரத்தில் கணிதம், சுற்றாடல் கல்வி, சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய மூன்று பாடங்களும் ஏழாந்தரம் தொடக்கம் கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சமூகக்கல்வியும் வரலாற்றும் மற்றும் சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய நான்கு பாடங்களும் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இப் பாடப் பகுதிகள் தரம் பதினொன்று வரை ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும்.

முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளின ஆசிரியர்களது வாண்மையை விருத்தி செய்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், ஆங்கில மொழி மூலப் புத்தகங்களையும், ஆசிரியர் கைநூல்களையும் வழங்கவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை புதிதாக ஆரம்பித்து செயற்படுத்த விரும்பும் பாடசாலைகள், மாகாணக் கல்விப் பணிப்பாளனின் சம்மதத்துடன் வகுப்புகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து இது தொடர்பான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிமனைகள கோரியுள்ளன. மாதிரி விண்ணப்பப் படிவங்களும் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அத்துடன் இச்செயற்றிட்டத்தை புதிதாக நடைமுறைப்படுத்த இயலாத பாடசாலைகள் நடைமுறைப்படுத்த முடியாத காரணங்களை வலய நிர்வாகத்திற்கு உடனடியாக அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (ம-ரி)

## குடாநாட்டிலுள்ள பள்ளிவாசல்கள் விரைவில் புனரமைக்கப்படவுள்ளன

குடாநாட்டில் யுத்த அனர்த்தங்களால் சேதங்களுக்கு உள்ளாகியுள்ள பள்ளிவாசல்கள் புனரமைக்கப்படவுள்ளன.

பள்ளிவாசல்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றியும் அவற்றைப் புனரமைப்பதற்கு ஏற்படும் செலவுகள் பற்றியும் மதிப்பிட கொழும்பிலிருந்து பொறியியலாளர் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

பள்ளிவாசல்களைத் திருத்துவதற்கு இக்குழு படையினர் மற்றும் பிரதேசசெயலர் ஆகியோரிடம் அனுமதி கோரியுள்ளதாகவும் தெரிவிக்கபட்டது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த நகர அபிவிருத்தி சமூக நலன்கள் அமைச்சர் மொகமட் மஹ்றூப் இந்தப் பள்ளிவாசல்களைப் பார்வையிட்டுச் சென்றபின்னர் மதிப்பீட்டுக குழுவினர் வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-117)

## ஆலயம் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு,ஜூன்6

தென்னிந்தியத் திருச்சபையின் வரணி ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் மக்கள் மீளக் குடியமரத் தொடங்கியதைத் தொடர்ந்து கடந்த காலங்களில் இப்பகுதியில் நிகழ்ந்த சண்டையினால் சேதமாக்கப்பட்டிருந்த இந்த ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டு வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டுவருகின்றன.

பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனால் சம்பிதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட மதவழிபாட்டு பிரதிஷ்டையில் சபைக் குரு ஏ.ஆர்.றொகான், சேகரக் குரு ஏ.வி.யேசுதாசன் மற்றும பல குருமார்களும், சபை மக்களும் கலந்துகொண்டனர்.

(ம-152)



கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் புதுவருட தினத்தன்று 'சமூக திலகம்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சைவப்புலவர் கந்தசாமிக்கு பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ரவிராஜ் பட்டச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

## மாநகர தொழிலாளர் போராட்டம் முடிவுற்றது!

யாழ்ப்பாணம்,ஜூன்6

ஏழு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.மாநகரசபையின் ஸ்தல ஸ்தாபன தொழிலாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் மேற்கொண்டுவந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுமுன்தினத்துடன் முடிவுக்கு வந்தது.

தொழிலாளர் பிரதிநிதிகளுடன மாநகரசபை ஆணையாளர் நடத்திய கலந்துரையாடலில் நிர்வாகத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே இணக்கம் காணப்பட்டது. தொழிலாளர்களால முன்வைக்கப்பட்ட ஏழு கோரிக்கைகளில் நிர்வாக உத்தியோகத்தரை உடனடியாக இடமாற்றுவது தவிர்ந்த ஏனைய கோரிக்கைகளில் இணக்கப்பாடு ஏற்பட்டது.

நிர்வாக உத்தியோகத்தரை இடமாற்றுவது தற்பொழுது சாத்தியமில்லை எனவும், இனிவரும் காலங்களில் ஏதாவது தவறுகள் இடம்பெற்றால் அது பற்றி ஆராயப்படும் எனவும் நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து தொழிலாளர்கள் தமது வேலைகளுக்குத திரும்பினர்.

(ம-10)

## கம்பஹா பிரதி மேயர் அடித்துக் கொலை

கொழும்பு,ஜூன்6

கம்பஹா நகர சபையின் பிரதி மேயர் இனந்தெரியாத ஆயுதக் கும்பலால் கடந்த திங்களன்று இரவு அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இவர் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று விசாரணைகளை நடத்திவரும் பொலீஸார் தெரிவித்தனர்.

(ம-6)

உதயன்

## சமாதான முன்னெடுப்பா, போர் முனைப்பா?

நூறு நாள்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டதும் போர் அறவே ஒழிந்தது; இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும்; சமாதானம் மலரும் என்றுதான் பலரும் எண்ணி மகிழ்ந்தார்கள்.

அந்த எண்ணத்தில் மண் விழுந்து விட்டதை இன்று உணர்கிறார்கள். சமாதான முன்னெடுப்புத் திரை கிழிந்து அதனூடாகப் போர் மேகங்கள் தெரியத் தொடங்கி விட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் போர்நிறுத்தத்தை விரும்புவது, அதை அறிவிப்பது, அதை அனுஷ்டிப்பது பற்றியெல்லாம் காரணத்தோடுதான் என்று சொல்லப்படுவது வழக்கம்.

அதாவது புலிகள் பலவீனமுற்றிருக்கும் போது தான் போர்நிறுத்தத்தை நாடுவார்கள். சிறிது ஓய்வு எடுப்பதற்கும் தங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் அடுத்த கட்டப் போருக்கு எல்லா ஆயத்தங்களையும் செய்து தங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்குமே புலிகள் போர் நிறுத்தத்தை நாடுகிறார்கள். மற்றப்படி அவர்கள் சமாதானப் பிரியர்கள் அல்லர். மாறாக அவர்கள் போர் வெறியர்கள் என்பது அவர்கள் மீதான குற்றச்சாட்டு.

அது இப்போது பொய் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டது. புலிகள் சமாதானச் சிந்தனையில் மூழ்கிப் போய் இருக்க, அரசாங்கம்தான் சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபட்டு இருப்பதாகக் காட்டிக் கொண்டு போர் முனைப்பில் காரியங்களைச் செய்து வருகிறது.

அதற்குச் சில உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

❒ இராணுவத்துக்குப் புதிதாக ஆள்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

❒ நவீன ஆயுதக் கொள்வனவுக்கு ஏற்பாடாகி இருக்கிறது.

❒ திருகோணமலையில் எண்ணெய்க்குதத் தொகுதி ஒன்றை இந்தியாவுக்குக் கொடுத்து இந்தியப் படையினர் இலங்கையில் மீண்டும் காலூன்ற வழி செய்யப்படுகிறது.

❒ அமெரிக்காவுடன் சேவை ஒப்பந்தம் என்ற பெயரில் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து அமெரிக்கப் போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் எல்லாம் விரும்பியபடி இலங்கை வர அனுமதி வழங்கப்படவுள்ளது. அத்துடன் ஏற்கனவே இருநாடுகளுக்குமிடையே உள்ள ஏற்பாட்டின்படி ஆயுத உதவி, பயிற்சி ஆகியவற்றைப் பெறுவது புதிய ஒப்பந்தம் மூலம் உறுதிசெய்யப்படுகிறது.

❒ பலாலி இராணுவ முகாமை விஸ்தரித்து அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

❒ யாழ்.குடாநாட்டு தென்மராட்சியில் சாவகச்சேரிக்கு அருகில் உள்ள நுணாவிலில் பொதுமக்களின் பல வீடுகள், காணிகள் ஆகியவற்றை அபகரித்து பென்னம்பெரிய இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

❒ வரணியில் பெரிய பீரங்கித்தளம் ஏற்கனவே அமைக்கப்பட்டுவிட்டது. பாதுகாப்பு நடவடிக்கைகள என்ற பெயரில் அரசு தரப்பில் இப்படிப் பல விதமான போர் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பது, புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவது போன்ற முக்கிய விடயங்களில் தேர்தலின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தவறிவிட்டார் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பைப் பற்றியே முதலில் பேசுவது என்று ஒப்புக்கொண்ட பிரதமர், இப்போது அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தே முதலில் பேசுவது என்று கூறுகிறார். ஜனாதிபதியின் தாளத்துக்கு அவர் ஆடத்தொடங்கி விட்டார் போல் இருக்கிறது என்றும் புலிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

ஒரு தேசம், ஒரு நாடு, ஒரே மக்கள் என்ற பிரதமர் ரணிலின் அரசியல் தத்துவம் தமிழ்மக்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைக் கோரிக்கைகளுக்கு முற்றிலும் எதிர்மறையானது என்பதை அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

தற்போதைய சமாதான முயற்சிகளின் எதிர்காலம் அரசின் கைகளிலேயே தங்கியிருக்கிறது என்பதை அவர் துலாம்பரமாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இனி அரசிடம் இருந்தே விளக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அரசு போருக்கான முனைப்பில் ஆர்வங்காட்டுவதைப் பார்த்தால் இந்தத் தடவையும் சமாதான முயற்சிகள் 'சாண் ஏற முழம் சறுக்கும்' முன்னைய அனுபவங்களை ஒத்ததாகவே நகர்ந்து கொண்டிருப்பது தெரிகின்றது.

இது ஒட்டுமொத்த தமிழ்மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. மீண்டும் போர் தங்கள் வாழ்வைச் சூழுமோ என்ற அச்சம் அவர்களிடம்.

# தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினை குறித்து இரு சமூகங்களினதும் வேறுபட்ட பார்வை

## 'தமிழ் கார்டியன்' பேட்டியில் பாலசிங்கம் அளித்த விளக்கம்

தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினை குறித்து சிங்கள - தமிழ்ச் சமூகங்கள் மத்தியில் வேறுபட்ட பார்வைகள் இருக்கின்றன என்பதை முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

கடந்த காலத்தில் நிகழ்ந்த சில பிரச்சினைகளை குறுகிய வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் அணுகியதால் பெரும்பான்மையான சிங்களவர்கள் மத்தியில் தமிழரின் பிரச்சினைகள் குறித்து ஒரு தவறான பார்வை நிலவுகிறது. மொழியில், கல்வியில், தொழில்வாய்ப்பில் முன்பு பாரபட்சம் காட்டப்பட்டதால் தமிழர்களுக்குச் சில குறைபாடுகள் இருப்பதாகவும், ஒற்றையாட்சியின் கீழ் ஓர் அரசியல் - நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கி, அதற்குக் குறைந்தபட்சம் அதிகாரப் பரவலாக்கம் வழங்கினால் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு கண்டுவிடலாம் என்பதுதான் இந்தக் குறுகிய கண்ணோட்டம். சிங்கள தீவிர இனவாதிகளைப் பொறுத்தவரை இனப்பிரச்சினை என்பதே இல்லை என்பதுதான் அவர்களது நிலைப்பாடு. தமிழ் மக்களது விடுதலைப் போராட்டம், இவர்களுக்கு ஒரு பயங்கரவாதப் பூதமாகவே தென்படுகிறது. இப்பயங்கரவாதத்தை இராணுவ அடக்குமுறைமூலம் அழித்துவிடவேண்டும் என்பது தான் இவர்களது கொள்கை. இனப்பிரச்சினையின் அடிப்படைகள் பற்றி விடுதலைப் புலிகளுக்கும், தமிழ்மக்களுக்கும் முற்றிலும் வித்தியாசமான பார்வை நிலவுகிறது. இந்தக் கண்ணோட்டம் அரைநூற்றாண்டு காலமாக நீடித்த அரச ஒடுக்குமுறையின் தனித்துவமான வரலாற்றிலிருந்து பிறந்தது.

தமிழரின் பார்வையில் அரச ஒடுக்குமுறையானது ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற தனிப்பட்ட சம்பவங்களாக நிகழவில்லை. மாறாக, சிங்கள அரச ஒடுக்குமுறையானது தமிழ்த் தேசத்தின் தூண்களாக விளங்கும் தமிழரின் மொழி, பண்பாடு, கல்வி, பொருளாதார வாழ்வு, தமிழரின் தாயக நிலம் ஆகியனவற்றைப் படிப்படியாக அழிக்கும் நோக்கத்தோடு முன்னெடுக்கப்பட்ட நாசகாரத் திட்டமாகும். தமிழ்மக்களின் தேசிய அடையாளத்தை முற்றாக அழித்துவிடும் நோக்கத்துடன் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒடுக்குமுறை என்பதால், இது இன அழிப்பைக் குறிக்கோளாகக் கொண்டது. இந்த வரலாற்று மெய்நிலையை தமிழர்கள் உணர்ந்துகொண்ட காரணத்தினாலேயே அவர்கள் தமது அரசியல் போராட்ட இலட்சியத்தையும் அடிப்படையாக மாற்றிக்கொண்டார்கள். ஆரம்பத்தில் சம உரிமை கோரிப் போராட்டிய எமது மக்கள், பின்னர் தமிழர் தாயகம் கோரியும், சுயநிர்ணய உரிமை கோரியும் அரசியற் போராட்டத்தை விரிவுபடுத்தினார்கள். அத்துடன் அரசியற்போராட்ட வடிவத்திலும் மாற்றம் ஏற்பட்டது. அஹிம்சை வழி தழுவிய அமைதிப் போராட்டம் ஆயுதம்தரித்த தேசிய விடுதலைப் போராட்டமாக மாறியது.

எனவே, தமிழ்மக்களின் அரசியற் போராட்டத்தினது படிநிலை வளர்ச்சியை புறநிலை நோக்குடன் ஆழமாக ஆய்வு செய்து பார்த்தால், தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணய உரிமை ஆகியவையே தமிழரின் இனப்பிரச்சினையின் அடிப்படைகள் என்பது புலனாகும். சில சிங்களப் புத்திஜீவிகள் வாதிடுவதுபோல், இவை அரசியல் விஞ்ஞானத்துறை சார்ந்த புதிரான கோட்பாடுகள் அல்ல. இவை, தமிழ்மக்கள் தமது அடிப்படை உரிமைகளை மீளப்பெறுவதற்காக நடத்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அரசியற் போராட்டங்களில் இருந்து பிறந்த உருப்படியான அரசியற் கோரிக்கைகளாகும்.

தமிழர் தாயாகம் என்பது, ஏதோ நிறைவுகாண முடியாத ஓர் அபிலாஷையைப் பிரதிபலிக்கும் பூடகமான கோட்பாடு அல்ல. மாறாக, தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற தமிழ்பேசும் மக்களின் உண்மையான வரலாற்றுப பின்னணியில் உருவகம் பெற்ற மெய்நிலைப் பொருளையே இது குறிக்கிறது. பல நூற்றாண்டுகளாக தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக வாழ்ந்து, ஒன்றாக உழைத்த வடக்கு - கிழக்கு என்ற தொடர்ச்சியான - தனித்துவமான - நிலப்பரப்பையே இது குறிக்கிறது. இந்த நிலம் அந்த மக்களுக்கே உரித்தானது.

தமிழரின் தேசிய அடையாளத்தைப் பேணிப் பாதுகாக்கும் விடயமும் ஒரு புதிரான கோரிக்கை அல்ல. அடக்குமுறையும் அதற்கு எதிரான எதிர்ப்பு முறையுமாகக் கட்டவிழ்ந்த ஓர் இரத்தம் படிந்த வரலாற்றிலிருந்து எழுந்த உருப்படியான அரசியல் அபிலாஷையையே இது குறிக்கிறது. தமிழ்மக்கள், ஒரு தனித்துவமான மக்கள் சமூகமாக விளங்குகிறார்கள். அவர்களுக்குத் தனித்துவமான ஒரு மொழி, பண்பாடு, வரலாறு, பொருளாதார வாழ்வு, அவர்களுக்கே சொந்தமான பாரம்பரிய நிலப்பரப்பு ஆகிய அம்சங்கள் இருப்பதால் அவர்கள் ஒரு தேசிய இனக் கட்டமைப்பை கொண்ட மக்களாக விளங்குகிறார்கள் எனவே, எமது மக்கள் தமது தேசிய அடையாளத்தைப் பேணிப்பாதுகாக்க விரும்புவது ஒரு நியாயமான, சட்டரீதியான கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையானது தமிழர் தேசிய இனப்பிரச்சினையின் முக்கிய அடிப்படைகளில் ஒன்றாக விளங்குகிறது. (ஐ)

# அரசமைப்புச் சட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்பற்றி வெள்ளியன்று முடிவு

## நாடாளுமன்றில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்6

அரசமைப்புச் சட்டசபையின் தற்போதைய நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து நாடாளுமனறத்தில் அவ்வப்பொழுது அறிவிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரச்மைப்புச் சட்டசபையின் நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் பிரதமர் எடுத்துக் கூறினார்.

"அரசமைப்புச் சட்டசபையின் உறுப்பினர்கள் நியமனம் உட்பட ஏனைய நடவடிக்கைகள் சீராக நடைபெற்று வருகின்றன. நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பதவி வழி வராத சபையின் உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 30 ஆயிரம் ரூபாவும் சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களுக்கு மாதாந்தம் 25ஆயிரம் ரூபாவும் கொடுப்பனவு வழங்கப்படும். ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களுக்கு மாதாந்தம் 20 ஆயிரம் ரூபா வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் தொடர்பாக பல முக்கிய பிரமுகர்களின் பெயர்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இறுதித் தெரிவு மேற்கொள்ளப்பட்டதும் பெயர்கள் ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்காக அனுப்பிவைக்கப்படும்.

இந்த உறுப்பினர்கள் தெரிவு தொடர்பாக கட்சித் தலைவர்களுடனும் சபாநாயகருடனும் நாளை வெள்ளிக்கிழமை கலந்துரையாடப்படும்.

- இவ்வாறு பிரதமர் மேலும் கூறினார். (ம)

# ஜே.வி.பி. தலைவரை அநுரா லண்டனில் சந்திக்கத் திட்டம்

கொழும்பு,ஜூன்6

முன்னாள் சபாநாயகரும், பொ.ஐ. முன்னணி நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்க லண்டனில் அடுத்த வாரம் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவைச் சந்திக்கவிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

எதிர்க்கட்சிக் கொரடா மங்களசமரவீர, அவரது கட்சி எம்.பி. நிமால்ஸ்ரீபால டி சில்வா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை எதிர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினரும், ஜே.வி.பியினரும் இணைந்து நடத்தும் ஆர்ப்பாட்ட இயக்கம் பற்றியே சந்திப்பின்போது கலந்துரையாடப்படும் என்றும் தெரிய வருகிறது. இந்த சமாதான எதிர்ப்பு இயக்கத்துக்கு அநுரா பண்டாரநாயக்காவே தலைமை வகிக்கின்றார்.

இயக்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை பற்றியும் சந்திப்பில் பேசப்படும் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சந்திப்பு லண்டனில் சோமவன்ஸ அமரசிங்கவின் இல்லத்தில் நடைபெறலாம் - என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

### நாளை

வைகாசி 24
வெள்ளிக்கிழமை
(07.06.2002)
திதி : துவாதசி
பின்னிரவு 3.50 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
முன்னிரவு 8.35 வரை.
சுபநேரம் : 5.52 - 7.22
ராகுகாலம்: 10.22 - 11.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மேலே உள்ளவர்களைப் பார்த்து ஏங்குவதைவிட, கீழே உள்ளவர்களை நினைத்து நிம்மதி அடைவதே மேல்.

# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் சுமுகநிலை தோன்றியிருக்கிறது!

## ஜெனரல் தளுவத்த நம்பிக்கை

கொழும்பு,ஜூன்6

நாட்டில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய சுமுக நிலை தற்போது தோன்றியிருக்கிறது. நடைமுறையிலுள்ள யுத்த நிறுத்தத்தின் மூலம் இது சாத்தியமாகிறது.

- இவ்வாறு ஓய்வுபெற்ற கூட்டுநடவடிக்கைத் தளபதி ஜெனரல் ரொஹான் தளுவத்த கூறினார்.

தளபதியின் ஓய்வை ஒட்டிய நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்றது. அங்கு அவருக்கு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்லே தலைமையில் மரியாதை அணிவகுப்பு நடததப்பட்டது.

ஜெனரல் தளுவத்தை அங்கு மேலும் கூறியதாவது:-

உள்ளூர் மட்டத்தில் தற்போது அமைதிச் சூழல் ஏற்பட்டிருப்பது மட்டுமல்லாமல், உலக நாடுகளிலும இலங்கை தொடர்பாக நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இதன்காரணமாக முழு நாடுமே நன்மையடையும்; பொருளாதாரம் அபிவிருத்தி அடையும். இவற்றின் அடிப்படையில் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

ஜெனரல் தளுவத்த நேற்றுமுன்தினம் கடற்படை, விமானப் படைத்தளபதிகளையும் சந்தித்து விடைபெற்றார்.

அவர் பிரேஸிலுக்கான இலங்கைத் தூதுவராக நியமனம் பெற்றிருக்கிறார். இராணுவத்தில் அவர் சுமார் 42ஆண்டுகள் சேவையாற்றினார். (ம)

# படையினர் வாய்த்தர்க்கம் துப்பாக்கிச்சூட்டில் முடிந்தது

கொழும்பு,ஜூன்6

அம்பாறை - கண்டி வீதியில் உள்ள 18ஆம் கட்டை விசேட அதிரடிப் படைமுகாமில் இரு படையினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் துப்பாக்கிச்சூட்டில் முடிவடைந்தது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த இரு படையினரும் கண்டி தேசிய வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை காலையில் அனுமதிக்கப்பட்டனர். தனிப்பட்ட பகைமையே இந்த சூட்டுச்சம்பவத்துக்குக் காரணம் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## புத்தகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகம் 3.யாழ்ப்பாணம் 4.இலக்கியக் கட்டுரைகள் 5.விடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 6.ஒரு காதலின் கதை நாவல்.
(4523)

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தினமும் இலவசமாய் சுத்தம்செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய்.
(4513)

குப்பிளான் சந்தியிலிருந்து 100 மீற்றர் தொலைவில் உள்ள 9 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி இ.சிவஞானம்பிகை, இல.9, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில்). (4507)

மைனர் 1000 1 சிறி 9065 கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.சோதிநாதன், No.46, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (4491)

## பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பதிவு செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகள்: மாருதி ரெக்ஸ், இல.1, பஜார்வீதி, யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4365)

## SITUATION WANTED

Internal Auditor/Book keeper/Accountant. 31 years old youth with 6 years experience seeks employment in any one of the above Capacity. Advertiser: Advt.No. 1531, C/o. Uthayan. (4489)

## அபூர்வ ஜோதிடம்

சித்தரின் பரம இரகசிய ஏட்டினால் தீராதநோய் தீர்த்தல், அதிர்ஷ்டபலன் அறிதல். விபரங்களுக்கு: ஆடிய பாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (சனி, ஞாயிறு 8.30 - 12.30) (4504)

## வகுப்புகள்

ஆண்டு 11இற்கான விசேட மாலை வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. ஆங்கிலம், கணிதம், தமிழ், விஞ்ஞானம், வர்த்தகம் தனித்தனிக் கவனத்துடன் சிறிய குழுவாகக் கற்பிக்கப்படுகிறது. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (வண்ணை சிவன் கோயில் அருகில்). (4501)

## மெய்வன்மைப் போட்டி

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.சிவகடாச்சம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா பிரதம விருந்தினராகவும் உடுவிற்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன், வலிகாம வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம், முன்னாள் தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கலவிப் பணிப்பாளர் எ.வி. கணேசலிங்கம், சமூகஜோதி எஸ். கணேசதாசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.(ம-13)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



## செல்வி ஜானுசா

குப்பிளானைச் சேர்ந்த
திரு.திருமதி உமாபரன் - ஜெயந்தி தம்பதிகளின்
செல்வப் புதல்வி **செல்வி ஜானுசா**

இன்று (06.06.2002) வியாழக்கிழமை முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

செல்வி ஜானுசாவை அம்மா, அப்பா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா, ஜெயம் மாமா(கனடா), அசோகன் மாமா, ரவிப் பெரியப்பா (லண்டன்), சந்திரா பெரியம்மா(கொழும்பு), அனந்தன் மாமா, இந்து மாமி(சுவிஸ்), புவிச் சித்தப்பா, மயூரன் சித்தப்பா(கனடா) மற்றும் உற்றார், உறவினர், அயலவர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்க என அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

*குப்பிளான்.* (4527)
*தகவல்:* உமாபரன் - ஜெயந்தி (அப்பா, அம்மா).

# மரண அறிவித்தல்கள்

## இராசலிங்கம் அமரசோதி

மண்கும்பானைப் பிறப்பிடமாவும் இல.170, கொழும்புத்துறை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் அமரசோதி அவர்கள் நேற்று (05.06.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் அன்னப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் சந்திரபவானியின் அன்புக் கணவரும் மகிந்தன் (U.S.A.), ஜெயப்பிரியா, முரளிகரன், குகதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சண்முகலிங்கம் (கனடா), காலஞ்சென்ற பாக்கியவதி மற்றும் குகேந்திரன் (ஹொட்டல் றொலெக்ஸ்), புவனேஸ்வரி (நோர்வே), புஸ்பநீலா (U.S.A.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகசபை, காந்தலட்சுமி (கனடா), ஜெமிலா, யோகலிங்கம் (நோர்வே), மாணிக்கவாசகர் (U.S.A.) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(06.06.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இல.591.காலி வீதி, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஹொட்டல் றொலெக்ஸ்*
*340, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**முரளிகரன்**
**(மகன்)**
(4524)

## திருமதி கமலாதேவி (கலா) அரியரத்தினம்

தாவடியைப் பிறப்பிடமாகவும், வடக்குப் புன்னாலைக்கட்டுவனைப் புகுந்தஇடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி அரியரத்தினம் அவர்கள் நேற்றுமுன்தினம்(04.06.2002) செவ்வாய்க்கிழமை மாலை காலமானார்.

அன்னார் அரியரத்தினத்தின் அன்பு மனைவியும் தாவடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கனகசபை (பெருமாள்பிள்ளை) - நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் வடக்குப் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த காலஞ்சென்ற அரியகுட்டி - நல்லம்மா ஆகியோரின் மருமகளும் சசிதரன் (கொழும்பு கல்கின்ஸ்), சேகரன் (வவுனியா கல்வியியற் கல்லூரி), பகீரதன், பகீரதி (வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், உரும்பிராய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மற்றும் சறோஜினிதேவி, பத்மாவதி, காலஞ்சென்ற கமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெகநாதலிங்கம் (கொழும்பு வர்த்தகர்) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் உரும்பிராயில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*பலாலி வீதி,*
*உரும்பிராய் தெற்கு.*
(4534)

தகவல்:
அ.அரியரத்தினம்
*(கணவர்)*


## அன்றாட செயற்பாடுகளில் நீங்கள் ஸ்தம்பிதமடைய வேண்டியதில்லை!

*தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்கும் ஜெனரேட்டர்களை மொல்கோ உங்களுக்கு வழங்குகிறது.*

**HIMOINSA & INTERPOWER**

# ஜெனரேட்டர்கள்

இடையறாத மின்சார சேவையை உறுதிப்படுத்துகிறோம்.

4.0 KVA to 4000 KVA

ஒரு வருட உத்தரவாதம்









☆ தன்னியக்கம் ☆ றீகொயில் ☆ Key Start மாதிரிகள் ☆ சத்தம் இல்லாத திறந்த வடிவமைப்பு

**கையிருப்பில் 4.5, 4.7, 20, 60, 70 KVA**

மொல்கோ விநியோக நிலையம் விற்பனைக்குப் பிந்திய, திறமை மிக்க, உடனுக்குடன் சேவையை வழங்குவதற்காக யாழ். மண்ணில் கால்பதித்துள்ளது.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்க:
யாழ்ப்பாணத்தில் -
*போல்ராஜ் சிவலிங்கம்*
S.T.P. 54A, பலாலி றோட், யாழ்ப்பாணம். Tel: 021-2674

MALCO

MALCO ENGINEERING (PRIVATE) LTD.
3, பெலனத்தை றோட், நுகேகொட. Tel: 074-405652, 811977, 820945
Fax: 074-406652 e-mail : malcosales@lanka.com.lk
(C/22408)

# மரணத்தின் மடியில் மனிதரை வீழ்த்தும் போதைப்பொருள்களை ஒழிப்போம்!

**"எல்லோருக்கும் ஒருக்காத்தான் சாவு ஆனா எனக்கு ஒவ்வொரு நாளும் சாவுதான். குடிச்சிட்டுவந்து ஒவ்வொரு நாளும் கொடுமைப்படுத்தினான்.." இது மனைவியின் புலம்பல்.**

**"இல்லை... நான் படிக்கேல்லை அப்பா உழைக்கிறது அவரது கசிப்புக்கும் பீடிக்கும் தான் காணும். இதுக்குள்ள எங்களை என் னெண்டு கவனிக்கிறது" பிள்ளைகளின் ஆதங்கம் இது.**

**"சே... அந்தாள் பச்சைக் குடிகாரன். அந்தக் குடும்பத்தோட தொடர்பு வைச்சு மரியாதை கெடப்போறியளே..." ஊராரின் விமர்சனம் இப்படி.**

ஆனால் இதற்கெல்லாம் கவலைபடாமல் - அவமானங்களைச் சுமந்து வெறும் நடைப்பிணங்களாக நம்மிடையே உலாவரும் பலரை நாம் கண்டுகொண்டுதான் இருக்கின்றோம். அவர்கள் வேறு யாருமல்லர். போதை மயக்கத்தின் பிடியில் சிக்கியவர்களே. இவர்களைப்பற்றி நாம் சிந்தித்திருக்கிறோமா? போகிறபோக்கில் 'அவன் ஒரு சதத்திற்கும் உதவாதவன்' என்ற பழிச்சொல்லை வீசிவிட்டு நம்பாட்டை நாம் பார்க்கின்றோமே தவிர அவர்களை மனிதராக்குவதுபற்றி சிந்திக்கிறோமா? போதை மயக்கத்தில் மனிதர்களை மரணத்தின் மடிக்கு இழுத்துச் செல்வதில் மது, சிகரெட் என சிலதை மட்டுமே நாம் அறிந்து வைத்திருக்கின்றோம். ஆனால், இவற்றைவிட மோசமாக இளைய தலைமுறையை எலும்புக்கூடுகளாக்கும போதைப்பொருள் பற்றிய விழிப புணர்வு நம்மிடையே ஏற்படவில்லையென்றே கூறவேண்டும். தரைப்பாதை திறப்பு சுமுகநிலையென நிலைமை மாறி வரும்வேளையில், போதைப் பொருள்களும் தம்கோரப்பிடிக்கும் குடாநாட்டை வளைத்துவிடும் வாய்ப்புகள் உள்ளன. 'வந்தபின் நோவதை விட வரும்முன் காப்பதே நன்று.'

**போதைப் பொருள் என்றால்...**

'ஒரு பொருள் அதன் இரசாயன இயல்பினால் உயிரி ஒன்றின் செயலில் அல்லது அமைப்பில் தாக்கத்தினை அல்லது மாற்றத்தினை ஏற்படுத்துமாயின் அதனைப் போதைப் பொருள் எனக்கொள்வர்'. அதுமட்டுமன்றி ஒருவனுடைய இயல்புநிலை உணர்வுகளை மறந்து, மறுத்து, மறைத்து அவன் விரும்புகின்ற உணர்வுகளுக்கு இட்டுச் செல்லும் நிலையினை ஏற்படுத்துவதே போதைப் பொருளாகும்.

போதைப் பொருள் பாவிப்பதனால் உள, உடல் ஆறுதல் அடைகின்றோம் என்பது சமூகச்சூழல் பிரசவித்த கருத்தாகும். இப்போதைவஸ்துக்கள் நோய்தீர்ப்பு நோக்கத்திற்காக இல்லாமல் உடலியல், உளவியல் தேவைகளுக்காக உள்ளெடுக்கும்போதே போதைவஸ்த்தென கணிக்கப்படுகிறது.

இது போதைவஸ்துக்கள் திண்மமாக, திரவமாக, வாயுவாகவென பல வேறு வடிவங்களில் உள்ளெடுக்கப்படுகின்றன.

நரம்புத்தொகுதியைத் தூண்டுகின்ற அனைத்தையும் போதைவஸ்துக்களாகக் கொள்ளவேண்டும் எனும் போது கோப்பி, தேநீர், கொக்கோ, மென்பானங்கள் போன்றவை அனைத்தையும் போதைவஸ்துக்கள் என்னும் எண்ணக் கருவிற்குள் அடக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் போதையாளர்கள் என்று நாம் யாரைக் குறிப்பிடுவது?

எவரொருவர் தன்னுடல், உள ஆரோக்கியம், குடும்பவாழ்வு, சமூக வாழ்வு என்பவற்றில் பிரச்சனையை ஏற்படுத்துகின்றாரோ அவரே போதையாளராகின்றார்.

போதையானது தாக்கங்களை ஏற்படுத்தும் எனத் தெரிந்தும் மனக் குழப்பங்கள், உடல் ஆரோக்கியக் குறைவு, உணர்வுகளில பின்னடைவு, பொருளாதார செயற்பாடுகளில் மந்தம், முன்னேற்றங்களில் தடை என்பவற்றை ஏற்படுத்தும்போது அவை ஏன் பயன்படுத்தப்படுகின்றன.

**சமூகவிரோதச் செயல்**

போதைப்பாவனையானது துர்நடத்தையாகவும், சமூகவிரோத செயலாகவும், நோயாகவும், ஆளுமைப் பிரச்சினைகளின் அடிப்படையாகவும், பாவச்செயலாகவும், சமூகப்பிரச்சினைகளாகவும் பார்க்கப்படும்போது அவை ஏன் தொடர்கின்றன என்பது வியப்புக்குரியதே.

இவ்வாறு சர்ச்சைக்குரிய பாவனைப் பொருள்களாக காணப்படும் போதைவஸ்துக்களை அடையாளப்படுத்த முனைவோமாயின் வரலாறறிலேயே முதலாகவும் அதிகளவு பயன்படுத்தப்படுவதுமான போதைப் பொருள் மது ஆகும்.

இது 'அல்க்கஹோல்' என்பதை தன்னுள் கொண்டிருக்கின்றது. இதன் தொடர்ச்சியான பாவனை கண்பார்வையினை இழக்கச்செய்வதுடன் மரணத்தின் வழிகாட்டியாகவும் மாறுகிறது.

கஞ்சா என்ற போதைப்பொருளின் பாவனையானது மனநிலையினையும் மூளையின் செயற்பாட்டையும் பாதிக்கும். கஞ்சாப் பாவனையாளரில் 25 வீதமானோர் மனவியாதிக்காரராக சமூகத்தில் உலாவுவது திண்ணமாகிறது.

'பிரவுண் சுகர்' என அழைக்கப்படும் ஹெரோயின் மூக்குப்பொடியாக, சிகரெட்டுக்குள் அடைத்து புகை மூலம் ஆவியாக்கி உள்ளெடுத்தல், ஊசிமூலம் என பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது.

மூளையின் செயற்பாடுகள் சீர்குலைந்து கனவில் சஞ்சரிப்பதுபோன்ற உணர்வைத் தூண்டும் ஹெரோயினால் உணர்ச்சி குன்றும் மனமகிழ்ச்சி அற்றுப்போகும். இரத்த அணுக்கள் அழிக்கப்படும். இரத்த ஓட்டம் கட்டுப்படுத்தப்படும். இது ஒருவரை பயன்படுத்தத் தொடங்கிய நான்கு நாட்களில் அடிமையாக்கும்.

இதே போலவே எல்எஸ்டி, அபின் (ஒபியம்), பி.ஸி.பி மாத்திரைகள் என போதைவஸ்துக்களின் வகைகளும அவற்றிற்கான பாதிப்புக்களும் எல்லையின்றி நீளுகின்றன.

## சமாதானக் காற்றோடு சத்தமின்றி நுழைய முயலும் கொடிய பழக்கம்

**அறிகுறிகள்**

இத்தகைய போதைப்பொருள்களை பாவிப்பவர்கள் தம்மை இலகுவில் சமூகத்தில் அடையாளப்படுத்திக் கொள்வர். உணவு, உறக்கம், நண்பர்கள், உடையுடுத்தும்பாணி, பழக்கவழக்கங்களில் மாற்றம், பசியின்மை, இனிப்புப் பண்டங்களில் ஆசை, அர்த்தமற்ற மௌனம், கண்களில் தொய்வும் லேசாக திறந்திருக்கும் வாயும், திக்குவதும் குரல் பிசிறடிப்பதும், போதைவஸ்து கிடைக்காதபோது போதைவஸ்து வெளிப்படும் வேறுபட்ட நடத்தைகள், உடம்பை தேய்த்துக் கொள்வது, உடம்பின் எடையில் வீழ்ச்சி, தனிமையை நாடல், திருட்டுத்தனம் போன்ற வெளிப்பாடுகள் மூலம் அவர்களை இனம் காணலாம்.

**பிரகாசன்**

இதேசமயம் தேநீர், கோப்பி போன்றவற்றிலும் ஒருவித போதை கலந்தே உள்ளது. கோப்பியில் 'கோபின்', தேநீரில் 'தரின்' ஆகிய போதைநிலைக்குட்படுத்தும் இரசாயனங்கள் உள்ளன.

இவற்றின் அதிகமான பாவனை நித்திரையின்மை, தலையிடி, ஏக்கம், சோர்வு, எரிந்துவிழுதல், விளக்கமின்றி கதைத்தல், சிந்தனை மாறாட்டம் போன்றவற்றை ஏற்படுத்தும்.

கர்ப்பிணிப் பெண்கள் அதிகமாக தேநீர், கோப்பி, குளிர்பானங்களை அருந்தினால் கருச்சிதைவு, நிறை குறைந்த பிள்ளை போன்றவற்றிற்கு அடித்தளமாகலாம்.

**புகைத்தல்**

இவைகளைவிட சகஜமாகப் பயன்படும் ஆபத்துக்கள் சிகரெட், புகையிலை. இவை பல நச்சுப் பொருள்களை கொண்டிருக்கின்றன. புகையிலை பதனிடப்படும்போது மேலும் பல நச்சுப் பொருள்களுக்கு புகலிடம் அளிக்கிறது.

சிகரெட்டிலுள்ள நிக்கோற்றின், ஐதரசன் சயனைட்டு, காபனோரொட்சைட்டு, அமோனியா, ஐதரசன் சல்பைட்டு, ஆசனிக் போன்ற நச்சுப் பொருள்கள் வெப்பமாக்கப்படும்போது 'தார்'ஆக மாறுகின்றன. இவை தேவையற்ற இளையங்களை உணவுக் குழாய், சுவாசப்பை, சிறுநீரகம், சிறுநீரகப்பை போன்றவற்றில் உண்டாக்குகின்றன.

ஆரோக்கியத்தினை கேள்விக்குறியாக்கும் இப்புகைத்தலினால் இரத்த அழுத்தம் கூடும், தலைச் சுற்று, மயக்கம், விரைவான நாடித் துடிப்பு, வாந்தி, வயிற்றோட்டம் என்பன ஏற்படுகின்றன. இதனை தொடர்ந்து பாவிக்கும்போது ஒருவித வலிப்பு நோயையும் உருவாக்கும். நுரையீரல் புற்றுநோய் உள்ளிட்ட பல புற்று நோய்களுக்கு புகையிலை காரணமாகின்றது.

இத்தகைய தாக்கங்களைத் தன்னகத்தே கொண்ட போதைவஸ்த்துக்களின் பாவனைகள் இன்பத்திற்காகவும், அதன் தாக்கம் எப்படியானது என்று அறியும் ஆர்வத்தினா

(10ஆம் பக்கம் பார்க்க)

# உறவுப்பாலம் அமைத்திட வந்த தமிழக அறிஞர்கள்

இலங்கையும், இந்தியாவும் சமூக, சமய பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் நீண்டகாலமாகப் பாரம்பரியத் தொடர்புகளை கொண்டுள்ள நாடுகள்.

ஆனாலும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொல்லப்பட்டதும் -

இந்த வழக்குத் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கைது செய்யப்பட்டு தமிழ் நாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்று அண்மையில் தமிழக பாண்டிச்சேரி சட்ட சபைகளில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும், இந்தியாவுக்கும் குறிப்பாக தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான உறவில் தப்பபிப்பராயங்களை ஏற்படுத்தியிருந்தன.

இலங்கையில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கான முன்னெடுப்புக்கள் நடைபெற்று வரும் இக்கால கட்டத்தில் தொப்பூள் கொடி உறவுள்ள தமிழகத்தில் ஈழத்தமிழர் நலனுக்கு குந்தகமான கோரிக்கைகள் எழுந்தது அவசியம் தானா? என்று சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்கள் 'கடுப்பு' அடைந்தது உண்மையே.

இத்தகைய சூழ்நிலையில் தமிழ் நாட்டு அறிஞர் குழுவொன்று யாழ். வருகை தந்தது. இவர்களின் வருகை இலக்கியப் பயணம் எனக்கூறி கொள்ளப்பட்ட போதிலும் - ஈழத்தமிழ் மக்கள் மனதிலுள்ள 'தமிழக் கடுப்பை' போக்குகின்ற ஒரு நோக்கமே தமிழக அறிஞர்களிடம் விஞ்சி நின்றதை அவதானிக்க முடிந்தது.

"சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாக நகர்ந்து கொண்டு செல்கின்ற அருமையான இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழக அரசியல்வாதிகள் உட்பட அனைத்து அரசியல் வாதிகளும் அமைதி பேணிக் கொள்வதே நல்லது தேவையற்ற தீர்மானங்களை மேற்கொண்டு அவை சமாதான முயற்சிகளுக்கு குந்தகமாக அமைந்து விட்டால் அதனால் பாதிக்கப்படுவது ஈழத்தமிழர்களே" என்று அந்த அறிஞர் குழுவுக்கு தலைமை தாங்கி வந்த தமிழப்பன் கூறியபோது, அவரது அந்த எண்ணத்தை உணரமுடிந்தது.

அவ்வறிஞர் குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீனத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

தமிழகத்தின் 'தமிழ்ப்பாவை' ஆசிரியரும், மத நல்லிணக்க இயக்கத்தின் பொதுச் செயலாளருமாகிய அகருணைதாசன் அங்கு கூறுகையில்:

'இலங்கையில் இனங்களின் பெயரால் வேறுபட்டு நின்ற மக்கள் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான சூழல் தற்போது உருவாகியுள்ளது.

இது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், திருப்தியையும் கொடுத்துள்ளது. தமிழ் நாட்டில் மத அடிப்படையில் பிரிந்து நிற்கும் மக்களை ஒன்றுபடுத்துவதில் தீவிரமாகப் பணியாற்றி வரும் நாம், ஈழத்தில் தமிழ் - சிங்கள - முஸ்லிம் இனங்கள் இடையே இணக்கம் ஏற்பட வேண்டும் என்பதில் ஆவலாக உள்ளோம்.

இங்குள்ள மக்களை சந்தித்தபோது, "தற்போதைய அமைதி தங்களுக்கு மிகப்பெரிய மன நிம்மதியைக் கொடுத்துள்ளதாகக் கூறினார்கள் சமாதானப் பேச்சுக்கள் காலந்தாழ்த்தி நடைபெற்றாலும் பரவாயில்லை. இந்த அமைதியும், ஐக்கியமும் தொடர்ந்து நீடித்தால்-அதுவே போதும்" என்றும் கூறுகிறார்கள். ஈழத்தில் அமைதிச் சூழல் தொடர்ந்து நீடித்து, நிலையாக நிலைபெற வேண்டும் என்பதே உலக மக்கள் அனைவரதும் விருப்பமாகும்' என்றார்.

சுற்றுச் சூழல் பற்றிய ஆய்வாளர் குரு ஆறுமுகம் பேசு கையில்: 'சூழலிய லாளர்களைப் பொறுத்தவரையில் மொழிச்சூழல் பற்றி யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதாகத் தெரிய வில்லை. தமிழ் மொழி விரைவில் அழிந்து போய் விடக்கூடிய அபாயம் எழுந்துள்ளது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கும் - தமிழை வளர்த் தெடுப்பதற்குமான செயற்பாடுகள் தேவைப்படுகின்றன.

மொழியுடன் கலாசார பாரம்பரியங்களும் கட்டிக்காக்கப்பட வேண்டும். அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் பாரம்பரிய விழுமியங்கள் பேணப்படுவதில் தவறிழைக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போரினால் தமிழ் மக்களுடைய வளங்கள் அழிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பனை, தென்னை போன்ற பயன்தரும் மரங்கள் அழிக்கப்பட்டதானது சகித்துக் கொள்ளமுடியாததாகும். இவற்றை தடுத்துநிறுத்துவதற்கும் - வளங்களை மீட்டுக் கொள்வதற்குமான செயற்பாடுகள் தேவை என்றார்.

திருக்குறள் இயக்கத் தலைவர் துரை.இராமநாதன் கருத்துக் கூறுகையில்:

'உலகிலே மிகவும் தொன்மை வாய்ந்த தமிழ்மொழி, தமிழினம் என்பன இன்று தனது இருப்பையே கேள்விக்குரியதாக்கிக் கொண்டு தள்ளாடி நிற்கிறது. இந்நிலையில் தமிழர் தம் அடையாளமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் திருக்குறள் தொடர்பான எண்ணக்கருகை தற்கால இளைய தலைமுறையினர் மத்தியில் தோற்றுவிக்கவேண்டியதும் - விருத்தியடையச்செய்ய வேண்டியதும் அவசியமானதாகும்.

மதுரையில் குறிப்பிடத்தக்க அளவிற்கு 'திருக்குறள்' சிந்தனைகளை விதைத்துள்ளோம். யாழ்ப்பாணத்திலே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆலோசித்து வருகிறோம். அதற்கு உறுதுணையாக இங்குள்ள சமய - இலக்கிய மன்றங்கள் செயற்பட வேண்டும். அவர்கள் எம்முடன் தொடர்புகளைப் பேணிக்கொள்வதை வரவேற்கிறோம் - என்றார்.

இயற்கை மருத்துவர் ந.கணேசன கருத்துக் கூறுகையில்: யாழ்ப்பாண மக்கள் இயற்கை மருத்துவத்தில் பெருநம்பிக்கை கொண்டவர்கள். இங்குள்ள மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு நாம் தயாராகவே உள்ளோம் - என்றார்.

தமிழக அறிஞர் குழுவின் தலைவரும், உலக தமிழ்மொழி அறக் கட்டளை நிறுவனத்தின் இந்திய ஒருங்கிணைப்பாளருமான புலவர் தமிழப்பன் கூறியதாவது:

இலக்கியப் பணிகளை ஆற்றுவது தொடர்பாக ஆராயுமுகமாக இங்கு வருகை தந்த நாம், இங்கே ஏற்பட்டுள்ள அனர்த்தங்களை கண்டு நெஞ்சம் கலங்கிவிட்டோம்.

யாழ்ப்பாணத்தின் நிலையை நாம் வெளியுலகிற்கு கொண்டு செல்வோம்; இயன்ற உதவிகளையும் செய்வோம்.

வானவேடிக்கைகளை மட்டுமே பார்த்து பழக்கப்பட்ட எமக்கு, இங்குள்ள மக்கள் எத்துணை பதை பதைத்திருப்பார்கள் என்பதை கற்பனை செய்யவே பயமாக உள்ளது. யாழ்ப்பாணம் நவீன உலகுடன் ஒப்பிடும்போது பல தசாப்தங்கள் பின் நோக்கி உள்ளது. இன்றும் குப்பி விளக்கில் கல்வி பயிலும் நிலையே இங்கு காணப்படுகிறது.

இங்குள்ள இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டுள்ளன. "உலகத் தமிழர் பேரமைப்பின்" கொடியில் பறந்து கொண்டிருக்கும் 'பனைமரம்' இங்கே

**ராஜபுத்திரன்**

காவல் அரண்களிற்காகத் துண்டாடப்பட்டுள்ளன.

நான் இலங்கை அரசிற்கு பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறேன். பனை மற்றும் தென்னை மரங்களைத் தறிப்பதனைத் தடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும். சுற்றுச் சூழல் இழப்பு என்பது இலகுவில் மீட்டுக்கொள்ளமுடியாததாகும்.

அடுத்த ஜூலை மாதம் சென்னையில் நடைபெறவுள்ள 'உலகத் தமிழர் பேரமைப்பின்' மாநாட்டில் நான் இதுபற்றி கடுமையாக விவாதிக்கவுள்ளேன். தமிழ் மக்களுடைய பொருளாதாரத்தின் ஆணிவேர் அறுக்கப்படுவது அனுமதிக்க முடியாததாகும்.

உலகில் அமைதியை நாடி - தேடி ஓடுபவன் தமிழன் தற்போது ஏற்பட்டுள்ள இந்த தற்காலிக அமைதி ஈழத்தில் தலையான சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதே எம் அனைவரதும் எதிர்பார்ப்பாகும் என்றார்.

# கசிப்பு உற்பத்தி செய்த இளைஞனுக்கு கசையடி

தென்மராட்சி,ஜூன்6

கசிப்பு உற்பத்தி செய்த 17 வயது இளைஞனுக்கு நீதிமன்ற வளவில் வைத்து கசையடி வழங்கப்பட்ட சம்பவம் மல்லாகம் நீதிமன்றில் இடம்பெற்றது.

சுன்னாகம் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இளைஞருக்கே இவ்வாறு கசையடி வழங்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம் அந்த இளைஞனுக்கு ஆறு கசையடிகள் வழங்குமாறு உத்தரவிட்டார்.

நீதிமன்ற வளவில் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், பொலீஸார் ஆகியோரால் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

யாழ். நியாயாதிக்க எல்லையில் கசையடி தண்டனை வழங்கப்பட்டது அண்மைக் காலத்தில் இதுவே முதற்றடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-117)

## உணவு முத்திரை விநியோகம்

இலவச உலர் உணவு நிவாரணம பெறத்தகுதியானவர்களுக்குரிய உணவு முத்திரைகள் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில கிராம சேவை அலுவலர்கள் ஊடாக தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

103 'ஏபி'இல் இருந்து 106 'ஏபீ' வரையான ஆறு மாதங்களுக்குரிய முத்திரைகள் அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

இந்த இலவச உணவு நிவாரண முத்திரைகளைப் பெறத்தகுதியானவர்கள் தத்தம் கிராம அலுவலர்களிடம் பங்கீட்டு அட்டை, அடையாள அட்டைகள் என்பவற்றைச் சமர்ப்பித்து தமக்குரிய உணவு முத்திரைகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஜ-152)

# வெளிநாட்டுக்கு சட்டவிரோதமாக செல்வோரைத் தடுக்கச் சட்டம்

சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோருக்கும் அவர்களுக்கான பயணங்களை ஏற்பாடு செய்வோருக்கும் கடுமையான தண்டனை வழங்கும் சட்டத்தைக் கொண்டுவருவதென அரசு தீர்மானித்திருக்கிறது.

தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டு வருவதாகவும் -

அவை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் -

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் தனது அமைச்சில் வெளிநாட்டுத் தூதுவர்களையும் ராஜதந்திரிகளையும் சந்தித்தபொழுதே அவர் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு அவப்பெயரைப் பெற்றுத்தரும் சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் விவகாரம் குறித்து அமைச்சர் அமரதுங்க வெளிநாட்டுத் தூதுவர்களுடன் நடத்திய இரண்டாவது சந்திப்பு இதுவாகும்.

புதிய சட்டங்கள் இறுதியாக்கப்படுவதற்கு முன்னர் வெளிநாட்டுத் தூதுவர்களின் ஆலோசனைகளை எதிர்பார்ப்பதாக அமைச்சர் கூறினார்.(ம)

## நாவற்குழி ம.வி. மாணவருக்கு!

யாழ்ப்பாணம், ஜூன்6

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் 2002 மார்கழியில் முதலாம், இரண்டாம் தடவை ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் உடனடியாக வந்து தமது ப்திவினை மேற்கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார்.


பனை அபிவிருத்திச் சபையின்

**திக்கம் வடிசாலை பனம் சாராயம்**

03.06.2002இல் இருந்து விலையேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

1 போத்தல் 750ml பனம் சாராயத்தின் சில்லறை விற்பனை விலை 258/=

முகாமையாளர்,
திக்கம் வடிசாலை.

(C/22404)


### வன்னியிலிருந்து மீளக்குடியமர

# கடல்வழியாகவரும் குடும்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றன

## கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

வடமராட்சி,ஜூன்6

வன்னியிலிந்து வடமராட்சியில் மீளக்குடியேறுவதற்காக கடல்வழியாக வள்ளங்களில்வரும் மீனவக் குடும்பங்கள் கடலில் வைத்து படையினரால் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் (செவ்வாய்) ஒரு குடும்பமும் கடந்த திங்கள் மூன்று குடும்பங்களும் இவ்வாறு வந்தபோது படையினரால் திருப்பி அனுப்பப்பட்டன.

இதற்கு முன்னரும் இதுபோன்ற சம்பவங்கள் பலதடவைகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீளக்குடியேறவரும் மீனவக் குடும்பங்களை படையினர் திருப்பி அனுப்புவது தொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச சங்க சமாசம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்கு (புகார்) கொண்டுவந்தது.

இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு படையினரிடம் தொடர்புகொண்டு விசாரித்தபோது மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவின்பேரிலேயே இந்த நடவடிக்கையை தாம் மேற்கொள்வதாகப் படையினர் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-173-117)

## யாழ்.வலய ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்வலயத்துக்குட்பட்ட ஆசிரியர்களுக்கு தற்போது நடைபெற்றுவரும் ஆரம்ப கணித பிரிவு செயலமர்வின் இறுதிநாள் நாளை வெள்ளிக்கிழமை என்றும் -

இந்தச் செயலமர்வில் பங்கு பற்றும் ஆசிரியர்களையும் அன்று காலை 8.30 மணிக்கு அந்தந்த நிலையங்களில் சமுகமளிக்கும்படியும் -

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஜ-3)

## இழப்பீட்டு விண்ணப்பங்களை சமர்பிக்கக் கோரிக்கை

வடமராட்சி,ஜூன்6

வடமராட்சி கிழக்கில் சில வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற யுத்தத்தினால் கடற்றொழில் வளங்களை இழந்த வடமராட்சி கிழக்கு மீனவர்கள் இழப்பீட்டுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தாளையடியில் உள்ள வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் இதற்கான விண்ணப்பப்படிவங்களைபட பெற்று பூர்த்திசெய்து இதே சமாசத்தில் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாகர்கோவில், குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் பருத்தித்துறையில் இயங்கும் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)


உ

யாழ்.புன்னாலைக்கட்டுவன் வடக்கு



**அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி**

(நாச்சிமார் கோயில்)

**ஆலய பிராயச்சித்த அபிஷேக விஞ்ஞாபனம்**

அம்பிகை அடியார்களே!

ஸ்வஸ்தி நிகழும் சித்ரபானு வருடம் வைகாசி மாதம் 24ஆம் நாள் நாளை (07.06.2002) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து பூசையும் நடைபெறும். அத்தருணம் அடியார்கள் அனைவரும் வந்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுஉய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு: நண்பகல் (மாகேஸ்வர பூசை) அன்னதானமும் நடைபெறும். அடியார்கள் பால், தயிர், இளநீர் யாவற்றையும் கொடுத்து உதவும் வண்ணம்வேண்டுகிறோம்.

ஆலய ஆதீன குரு,
"வேதாகம கிரியாஜோதி",
"ஆகமகிரியா திலகம்", "சிவாச்சாரிய ரத்னா"
பிரம்மஸ்ரீ ந.சபாரத்தினக்குருக்கள். (C-22396)



உ

ஓம் சக்தி

ஊர்காவற்றுறை - புளியங்கூடல் - செருத்தனைப்பதி

**ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்**

**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் ~ 2002**

கொடியேற்றம்: வைகாசித் திங்கள் 24ஆம் நாள் நாளை (07.06.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணி

ரதோற்சவம்: ஆனித்திங்கள் முதலாம் நாள் (15.06.2002) சனிக்கிழமை காலை 8.30 மணி

தீர்த்தோற்சவம்: ஆனித் திங்கள் 2ஆம் நாள் (16.06.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி

செருத்தனைப்பதி,
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை. (4522)

ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்.



**கண்ணீர் அஞ்சலி**

சுமங்கலி ஜுவல்லர்ஸ் உரிமையாளர்

ச.கைலாசபிள்ளை (நவம்) அவர்களின் அன்பு மாமனார்

**கணபதிப்பிள்ளை இராசரெத்தினம்**

(இளைப்பாறிய இ.போ.ச.நடத்துநர்)

அவர்கள் காலமான செய்தியினைக் கேட்டு அதிர்ச்சியடைந்தோம். எம் துயரினை அவர்தம் குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்வதுடன, எங்கள் கண்ணீர்ப் பூக்களை அமரருக்குக் காணிக்கை ஆக்குகின்றோம்.

118A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (4511)

...ளர்களும்,
ஊழியர்களும்.



**பெற்றுக்கொள்ளவும்**

நீர்வேலியைச் சேர்ந்த
செ.ஜெயராசாவின்
கைப்பை கண்டெடுக்கப்பட்டுள்ளது. கீழ்க்காணும் முகவரியில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

சி. துரைசிங்கம்
பாரத் உணவகம்,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (4517)



**தேவை**

★ பதனிட்ட றால்,
★ பனங்கட்டி,
★ புளுக்கொடியல்
என்பன மொத்தமாக பெற்றுக்கொள்ளப்படும்.
சமையல் வேலையாள்கள் தேவை.

பாரத் உணவகம்
302, ஆரியகுளம் சந்தி, யாழ். (4518)



**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**

சுத்திகரிக்கப்பட்ட Bairha Farm கோழி இறைச்சி 1 Kg-200/- மொத்தமாக வாங்குவோருக்கு விசேட கழிவு கொடுக்கப்படும். அத்துடன் Chicken Sausages, Meat Balls, Chicken Drumsticks, Fish Chinese Rolls, Anchor Butter, Flora Margerine, Astra, Elephant House Sponge Roll Cake என்பனவற்றை எம்மிடம் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். (4516)

தொடர்பு:
வரணி மிசன் பண்ணை விற்பனை நிலையம்
145, நவீன சந்தை யாழ்ப்பாணம். T.P.: 2868



**இதோ விற்பனைக்கு வந்துவிட்டன!**

றேடியோ, T.V.,
அவற்றுக்குரிய உதிரிப்பாகங்கள் மற்றும்
குளிர்சாதனப் பெட்டி, Washing Machine,
மின் விசிறிகள்
ஆகியவற்றை உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும்

**V.K. இராசரத்தினம்**

95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4512)



**கண்ணீர் அஞ்சலி**

எமது செயலக நெசவு போதனாசிரியை
**திருமதி கலாவதி மனோகரன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி குமாரசாமி சேதுப்பிள்ளை**

அவர்களது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.மேற்கு பிரதேச செயலக
உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம். (4509)



**உதைபந்தாட்ட ரசிகர்களே!**

யாழ்நகரில் விளையாட்டு உபகரணங்கள் விற்பனையில் சிறந்து விளங்கும்

**Yonex Multi Palace இன்**

**பரிசுப்போட்டி**

நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2002ம் ஆண்டுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி தொடர்பாக கேட்கப்படும் ஐந்து வினாக்களுக்கு சரியான விடையளிப்பதன் மூலம் ஜொனெக்ஸ் மல்ரிபலஸ் வழங்கும் சிறப்புப் பரிசினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

* முதலாம்பரிசு உதைபந்தாட்ட காலணி (*MIKASA*) மற்றும் பெறுமதி மிக்க இரு ஆறுதல் பரிசில்களும் உங்களுக்காக காத்திருக்கின்றன.

விண்ணப்பங்கள் கிடைக்கும் இடங்கள்

- ஜொனெக்ஸ் மல்ரீ பலஸ் 76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
- மொடோன்ஸ் ஸ்ரோர்ஸ், பஸ்நிலையம் நெல்லியடி, கரவெட்டி.
- ரனீயா புடவையகம், (சந்தைக்கு முன்பாக) பிரதான வீதி, மானிப்பாய்.

விடைகள் அடங்கிய படிவத்தை நேரில் அல்லது தபால் மூலம் 24.06.2002ற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
76, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# கடன் அட்டை கையிலிருந்தால் உலகையே விலை பேசலாம்!



கடன் அட்டைகள் விநியோக அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் ஹற்றன் நஷனல் வங்கியில் இடம்பெற்றபோது கடன் அட்டைகள் குறித்து விளக்குகிறார் வங்கியின் கடன் அட்டைப்பிரிவின் பிரதம முகாமையாளர் பி.சிறீதரன். யாழ்.கிளை முகாமையாளர் தி. ஜெயவிரசிங்கம் அருகில் அமர்ந்துள்ளார்.

**சே**மிப்புப் பழக்கம் அதிகம் உள்ள குடாநாட்டு மக்கள் அவசரத் தேவைகளுக்கு உடனடியாக ரொக்கப்பணம் புரட்ட முடியாது திண்டாடுவது வழக்கமானதுதான். வங்கிக் கணக்கிலோ, தங்க நகைகள் போன்ற சொத்துக்களாகவோ பணத்தை முதலிட்டு வைக்கும் மக்களின் அவசரத் தேவைகளை நிறைவேற்ற வரப்பிரசாதமாக வந்திருப்பவையே "கடன் அட்டைகள்" இதுவரைகாலமும் வெளிநாட்டில் இருந்து வருபவர்களின் கையில் தவழ்ந்து குடாநாட்டு மக்களை ஏக்கம் கொள்ளவைத்த நாகரிகத்தின் அடையாளமாகவும் கருதப்படும் - கடன் அட்டைகளை யாழ். மக்களுக்கு வழங்கி ஹற்றன் நஷனல் வங்கி தன்னை பெருமைப்படுத்திக் கொண்டுள்ளது.

தற்போது உலகில் முன்னேறிய நாடுகள் எங்கும் புழக்கத்தில் உள்ள 'விஸா' மற்றும் 'மாஸ்ரர் காட்' ஆகிய கடன் அட்டைகளை ஹற்றன் நஷனல் வங்கி விநியோகிக்கிறது.

'இன்று வாங்கும் ஒரு பொருளுக்கு 55 நாள்களின் பின்னர் - வட்டி எதுவுமின்றி - நீங்கள் பணம் செலுத்தினால் போதும். இதுவே கடன் அட்டைகளின் அடிப்படை' என்கிறார் ஹற்றன் நஷனல் வங்கியின் கடன் அட்டைகள் பிரிவு பிரதம முகாமையாளர் பி.சிறிதரன்.

அப்படி என்றால் கையில் தாராளமாகப் பணம் இருப்பவர்களுக்கு கடன் அட்டைகள் அவசியமில்லையா?




விளக்குகிறார் பிரதம முகாமையாளர், உலகில் பணம் புழங்கும் இடங்களில் எல்லாம் களவும் இடம் பெறுகிறது. உங்களது கடன் அட்டைகளை நீங்கள் மட்டுமே அதுவும் நேரடியாகப் பயன்படுத்தமுடியும் என்பதால் அச்சமின்றி தூர இடங்களுக்குக் கூட பொருள் வாங்கச் செல்லலாம்.'

இதைவிட அவசரத் தேவைக்கு கை கொடுக்கும் உற்ற தோழன் கடன் அட்டைகள் என்கிறார் ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.சோதி லிங்கம்.

'இன்று அனைத்து வசதிகளையும் கொண்ட தனியார் மருத்துவமனையில் நோயாளி ஒருவரை அனுமதிக்க முற்பணம் கட்டுவது அவசியமாகிறது. அதேபோன்று உயிர் காக்கும் மருந்து ஒன்றை உடனடியாக வாங்க கையில் கணிசமான பணம் தேவைப்படுகிறது.

துரதிஷ்டவசமாக இத்தகைய சூழ் நிலை எவருக்கும் ஏற்படலாம். அதுவும் நள்ளிரவாகக்கூட இருக்கலாம். இந்த நிலையில் கடன் அட்டை உங்களுக்குக் கைகொடுக்கும். திருமணம், உறவினருக்கு அன்பளிப்பு என்று எதுவானாலும் அவசரமான பணத் தேவைகளை கடன் அட்டைகள் கொண்டு தீர்த்து விடலாம்' - என்றார் பிராந்திய முகாமையாளர்.

அதுமட்டுமல்ல, கடன் அட்டைகள் மூலம் குறிப்பிட்ட அளவு ரொக்கப் பணத்தைக்கூட நீங்கள் பெற்றுக் கொள்ளமுடியும் என்கிறார் ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்நகரக் கிளை முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம். உதாரணமாக ஒருவர் 50 ஆயிரம் ரூபாவுக்கு ரொக்கம் கொடுத்து ஒரு பொருளை வாங்கினால் மேலதிக லாபம் எதுவும் அவருக்குக் கிடையாது.

ஆனால், அதே தொகைக்கு கடன் அட்டை மூலம் பொருளை வாங்கும் ஒருவர், அந்தப் பணத்தை 55 நாள்களுக்குள் எவ்வித மேலதிக அறவீடும் இன்றி வங்கிக்குச் செலுத்தினால் போதுமானது. 50 ஆயிரம் ரூபாவுக்கு சேமிப்பு கணக்கில் 55 நாள்களுக்காகும் வட்டி 602 ரூபா ஆகும்.

ஆகமொத்தத்தில், 50 ஆயிரம் ரூபா கையில் இருப்பவர்கூட கடன் அட்டை மூலம் பொருளை வாங்கி விட்டு, மறுபுறம் 50 ஆயிரம் ரூபாவுக்கு 55 நாள்களுக்கான வட்டியையும் பெற்றுக்கொண்டு 55ஆவது நாளில் பணத்தைக் கட்டும் லாபம் இதில் உண்டு.

- இப்படி விளக்கினார் கிளை முகாமையாளர்.

எல்லாம்சரிதான், இத்தகைய வசதிகள் குடாநாட்டில் வந்துவிட்டனவா? ஆச்சரியம் கலந்த கேள்விக்கு அமைதியாகப் பதிலளித்தார் பிரதம முகாமையாளர்.

'இன்று கொழும்பிலோ, வெளிநாடுகளிலோ கடைகள், உணவகங்கள், மருந்துவமனைகள் என எங்கு நுழைபவரும் கேட்கும் முதல் கேள்வி, "கடன் அட்டை மூலம் பணம் செலுத்த முடியுமா?" என்பதாகவே அமைகிறது. அதேபோன்றநிலை இங்கு விரைவில் வந்துவிடும். பிரபலமான கடை என்றால் கடன் அட்டைகள் அங்கீகரிக்கப்படும். மக்கள் கடன் அட்டைகளை வாங்குவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். அதனால் இனிமேல் கடன் அட்டைகளை அங்கீகரிக்கும் கடைகளுக்கு வியாபாரம் அதிகரிக்கும்.'

உறுதியாகக் கூறினார் அவர்.

'விரைவில் இங்கு வர்த்தக நிலையங்களில் கடன் அட்டைகளை அங்கீகரிக்கும் வசதிகளை ஏற்படுத்தப் போகின்றோம். அவர்கள் கடன் அட்டைக்கு விற்கும் பொருள்களுக்கு மறுநாளே வங்கி பணம் செலுத்தி விடும். அத்துடன் இந்தச் சேவைக்காக கணிசமான ஒருதொகை சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையத்துக்கு வங்கி செலுத்தும். சொல்லப்போனால், ஒருவர் கடனுக்கு வாங்கும் பொருளுக்காக வங்கி உடனடியாக பணத்தைச் செலுத்துகிறது. ஒரு வர்த்தகர் கடன் அட்டைக்கு பொருளை விற்றால் அதற்குக்கூட வங்கி மேலதிகமாக ஒருதொகையை வழங்குகிறது. ஆக வாங்குபவருக்கும் விற்பவருக்கும் லாபம் கிடைக்கும்' - இப்படி விளக்கினார் பிராந்திய முகாமையாளர்.

தற்செயலாக கடன் அட்டை தொலைந்துவிட்டால்......

'ஒரு பிரச்சினையும் இல்லை. உடனடியாக 01-523523 என்ற எண்ணில் கொழும்புத் தலைமையகத்தைத் தொடர்புகொண்டு கடன் அட்டை தொடர்பாக அவர்கள் கேட்கும் விவரங்களுடன் தொலைந்ததையும் கூறி விட்டால் போதும். அச்சமின்றி நீங்கள் நிம்மதியாக இருக்கலாம்' - என்றார் பிரதம முகாமையாளர்.

கடன் அட்டையால் இவ்வளவு லாபங்கள் உள்ளதே? அப்படியானால் எவர் வேண்டுமானாலும் அதனை வாங்கி விடலாமோ?

'வாங்கலாம்தான், ஆனால் கடன் அட்டைகள் பெற மிகச் சுலபமான விதிகளைத்தான் வைத்திருக்கிறோம்' என்ற கிளை முகாமையாளர், அவற்றை விளக்கினார்.

☆ 18 வயதுக்கு மேற்பட்டவராக

☆ நிரந்தர வருமானம் உள்ளவராக இருந்தால் போதும். அவர் கடன் அட்டைகள் பெறமுடியும்.

இதற்காக வங்கியில் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து, அதனுடன் தேசிய அடையாள அட்டை, மாதாந்தச் சம்பளச் சான்றிதழ் அல்லது கடந்த 3 மாதங்களுக்கான வங்கிக் கணக்கின் பற்று வரவுப் பட்டியல் ஆகியவற்றைச் சமர்ப்பித்தால்போதும். அவற்றைக் கவனத்திற்கொண்டு திருப்தி ஏற்படும் பட்சத்தில் வங்கி கடன் அட்டைகளை வழங்கும்.

இதைத்தவிர, வங்கி வைப்புக் கணக்குகளுக்கு எதிராகவும் கடன் அட்டைகளைப் பெற வாய்ப்புண்டு. - என்று கூறினார் அவர்.

'இதில் வாடிக்கையாளர்களின் கடன் அட்டையின் பெறுமதி உட்பட அனைத்து விடயங்களிலும் ரகசியம் பேணப்படும் என்ற உறுதிமொழியை ஹற்றன் நஷனல் வங்கி வழங்குவது தனிச்சிறப்பு.'

- என்றார் பிராந்திய முகாமையாளர்.

அப்படியானால், இனிமேல் கொழும்பில் கடன் அட்டைமூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை 55 நாள்களுக்குள் இங்கு கொண்டு வந்து விற்றுவிட்டு, லாபத்தை எடுத்துக் கொண்டு வங்கியில் பணத்தைக் கட்ட வர்த்தகர்கள் முண்டியடிப்பார்களோ...? ☆

# கணனிக் கல்வியில் புதிய சகாப்தம் படைக்கும் இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகம்

இன்றைய உலகை வியக்க வைக்கும் பல சாதனைகளைச் செய்து கொண்டிருக்கும் தகவல் தொழில் நுட்பவியலின் இலங்கைப் பிரவேசமே இலங்கை, தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகம் (SLIIT). க.பொ.த (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தும் மருத்துவம், பொறியியல் துறைகளுக்குத் தெரிவுசெய்யப்படவில்லையே என கவலை கொண்டிருக்கும் மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கான சிறந்த இடமாக இலங்கை தகவல் தொழில் நுட்பவியல் நிறுவகம் விளங்குகிறது. இது கொழும்பு நகரின் கொள்ளுப்பிட்டியிலும், கொழும்புக்கு கிழக்கே உள்ள மாலபே என்ற இடத்திலும் இயங்கிக்கொண்டிருக்கிறது. 2000 ஆம் ஆண்டில் ஆரம்பித்து இன்று இலங்கையில் முன்னணி நிறுவகமாக விளங்குகிறது. இது இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு தகவல் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகமாகவும் இந்த நிறுவகம் உள்ளது. மிக வேகமாக வளர்ந்து வருகின்ற தகவல் தொழில்நுட்ப கைத்தொழிலுக்கு வேண்டப்படுகின்ற தொழில்சார் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கென இந்நிறுவகமானது கல்வி உயர் கல்வி அமைச்சு, உள்நாட்டு சர்வதேச வாணிபம், உணவு அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுகளின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்டது.

இந்த நிறுவகம் இலங்கை சட்டமூலத்தின் திருத்திய பிரகாரம் 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழக சட்ட இல 16இன் படி ஒரு வெளிநாட்டு




பல்கலைக்கழகத்துடன் இணைந்து பட்டம் வழங்க அரசாங்க அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமாகும். இதன் படி உலகின் புகழ்பெற்ற 3 பல்கலைக் கழகங்களுடன் இணைந்து சிறப்பு தகவல் தொழில்நுட்பமாணிப் பட்டத்தினை வழங்குகிறது.

இந்த நிறுவகத்தின் முக்கிய நோக்கம், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்கி, பயிற்சி அளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், மென்பொருள் அபிவிருத்தி நிலையங்களை உருவாக்கலும், விருத்தி செய்தலுமாகும். நான்கு கல்வி ஆண்டுகளைக் கொண்ட இந்த நிறுவகத்தின் பட்ட நிகழ்ச்சி நிரலின் படி

☆ முதல் வருடம் முடிந்தால் தகவல் தொழில்நுட்பவியல் சான்றிதழும்,

☆ இரண்டாவது ஆண்டின் முதல் பிரிவின் முடிவில் பகுதி டிப்ளோமா, இரண்டாம் பிரிவின் முடிவில் டிப்ளோமா ஆகியவையும்,

☆ மூன்றாம் ஆண்டின் முடிவில் உயர்தர டிப்ளோமாவும்,

☆ நான்காம் ஆண்டின் முடிவில் பட்டதாரி பட்டமும்

வழங்கப்படுகின்றன.

வெவ்வேறு மட்டங்களில் வெளிச் செல்லும் மாணவர்கள் தொழில் செய்த பின்பு அல்லது கைத்தொழில் பயிற்சி பெற்றபின் அல்லது தகுந்த கட்டத்தில் தகுந்த பதிவுடனும் இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகத்தின் அங்கீகாரத்துடனும் மீண்டும் சேர்ந்து கல்வியைத் தொடரலாம். ஆங்கிலம் கல்வி மொழியாக இருக்கும்.

மொத்தமாக 4 ஆண்டுகளைக் கொண்ட பாடத்திட்டத்தில், கணனி சார்ந்த பெரும் விடயங்களையும் தழுவியதாகப் பாடத்திட்டங்கள் அமைந்துள்ளன. நாளுக்குநாள் மாற்றமடைந்துவரும் கணனி உலகிற்கு ஏற்றவகையில் பாடத்திட்டமும், வருடத்திற்கு வருடம் மாற்றி அமைக்கப்படுவதால், இங்கு கற்கும் ஒவ்வொருவரும் பூரண தகுதி அடைவது உறுதிப்படுத்தப்படுகிறது.

இந்நிறுவகம் இலங்கையில் வேறு எந்த ஒரு கணனி நிறுவகமும் வழங்காத வசதிகளை மாணவர்களுக்கு

## வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டப் படிப்புகளை குறைந்தசெலவில் இங்கேயே கற்றிடலாம்

வழங்குகிறது. இதற்கு பிரதான காரணம் இது அரசாங்கத்தினால் நடத்தப்படுவதே ஆகும். பிரமாண்டமான கணனி ஆய்வுகூடமும், நூலகமும் இங்கு காணப்படுகிறது. இலங்கைத் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகம் மாணவர்களுக்கு வழங்கும் சேவைகளில் பிரதானமானது, குறைந்த செலவிலேயே வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் பட்டங்களைப் பெற வழி செய்வதாகும். உதாரணமாக ஆஸ்திரேலியாவின் கேர்டின் பல்கலைக்கழகப் பட்டத்தை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தின் மூலம் பெற இரண்டாயிரம் ஆஸ்திரேலிய டொலர்களே வருடத்துக்கு செலவாகும்.

ஆனால், அதே பல்கலைக்கழகத்தில் நேரடியாக கல்விகற்பதாயின் வருடமொன்றிற்கு 8000 ஆஸ்திரேலிய டொலர்கள் செலுத்தவேண்டும். இதனிடையே உள்ள வேறுபாட்டை உயர்கல்வி அமைச்சு செலவிடுகிறது.

இத்தகைய வசதி வாய்ப்புகளை வழங்கும் இலங்கை தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் குடாநாட்டு மாணவர்களும் இணையலாம். ஆண்டுக்கு ஒரு முறைமட்டுமே மாணவர்கள் தேர்வு இங்கு நடத்தப்படுகிறது.

மாணவர்களை தகவல் தொழில் நுட்பவியல் நிறுவகத்தில் சேர்ப்பதற்கான நுண்ணறிவுப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி கொழும்பு, கண்டி, குருநாகல், காலி, மாத்தறை ஆகிய இடங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நுண்ணறிவுப் பரீட்சை தமிழ்மொழி மூலத்திலும் நடைபெறும்.

2003ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் தேர்வுக்கு கடந்த மே மாதம் 23ஆம் திகதி வெளிவந்த 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி எதிர்வரும் 14ஆம் திகதி ஆகும்.

மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விவரங்களை கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண் ஸ்போர்ட்ஸ்பொட்டில் பார்வையிடலாம். ☆

# தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி.

## அங்கத்தவர்களுக்கான முக்கிய அறிவித்தல்

## கிளைக்குழு தெரிவு தொடர்பானது

தங்கள் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுகள் எதிர்வரும் (23-06-2002) ஞாயிற்றுக்கிழமை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தங்கள் சங்கத்தில் 31-03-2002 ஆம் திகதியுடன் முடிவடைந்த கிளைப் பொதுச் சபைக்கு வந்து வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களின் அட்டவணைப்படியும், 19-05-1998 ஆம் திகதிய 1028/6 இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கும் அமையவும் தங்கள் சங்கக் கிளைகளின் கிளைக்குழு தெரிவுகள், என்னால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் பின்வரும் இடங்களில் நடத்தப்படும்.

தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கான கூட்ட அறிவித்தல் அனுப்பிவைக்கப்படும். அறிவித்தல் கிடைக்கப் பெறாதவிடத்து தங்கள் சங்க தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு அதனைப்பெறமுடியும்.

| கிளைகளின் பெயரும் இலக்கமும் | கிளைக்குழுத் தெரிவு நடத்தப்படும் இடம் | தெரிவு நடத்தும் உத்தியோகத்தர்கள் |
|---|---|---|
| 01. கைதடி வடக்கு | குருசாமி வித்தியாசாலை, கைதடி வடக்கு. | திரு.க.குகதாசன் |
| 02. கைதடி மத்தி | சேதுகாவலர் வித்தியாசாலை, கைதடி மத்தி. | திரு.ஆ.நாகலிங்கம் |
| 03. கைதடி மேற்கு | முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம், கைதடி மேற்கு. | திரு.வை.கைலைநாதன் |
| 04. கைதடி தெற்கு | விக்கினேஸ்வரா வித்தியாசாலை, கைதடி கிழக்கு, கைதடி. | திரு.க.சின்னராசா |
| 05. நாவற்குழி | நாவற்குழி மகா வித்தியாலயம், நாவற்குழி. | திரு.எஸ்.செல்வரட்ணம் |
| 06. கோவிலாக்கண்டி | ” ” | திருமதி செ.அழகேந்திரராசா |
| 07. கைதடி நாவற்குழி | முன்னைய தற்காலிக காரியாலயம், இனுவில் வைத்தியசாலை. | திரு.பி.ஸ்ரீகுமார் |
| 08. மறவன்புலோ | ” ” | திருமதி க.இந்திராணி |
| 09. தனங்கிளப்பு | ” ” | திரு.கே.அருந்தவநாதன் |
| 10. கைதடி நாவற்குழி தெற்கு | ” ” | திரு.ரி.என்.ராஜா |
| 11. கோவிலாக்கண்டி மத்தி | ” ” | திரு.செ.செந்தூரன் |

*தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம், கைதடி.*

ஒப்பம்: செ.கனகசபாபதி,
கூட்டுறவு உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(C/22412)

# மரணத்தின் மடியில்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும், தவறான நம்பிக்கைகளினாலும், பிறரது நிர்ப்பந்தத்தினாலும், சந்தர்ப்ப சூழ்நிலைகளினாலும் பழக்கத்திற்குள்ளாகிறது.

இத்தகைய ஊக்குவிப்பே பின்பு தவிர்க்க முடியாத பாவனைக்குள்ளாக்கி போதை அடிமையாக மாற்றி விடுகின்றது. இவ்வாறு போதைக்கு அடிமையானவர் பல்வேறு தாக்கங்களிற்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை தவிர்க்கமுடியாதது.

இந்த போதைவஸ்துக்களின் பாவனை உடலியல், உளவியல் தாக்கங்களாக அமைந்து, அதுவே கிளைவிட்டு வேரோடி குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் என சமூகத்திற்கே பங்கம் விளைவிக்கும் தாக்கத்திற்கு இட்டுச்செல்கின்றது.

போலியான மகிழ்வினைத் தூண்டும் போதைப்பழக்கம், மனக்குழப்பம், பொருளற்ற தீர்மானங்கள், மறதி, கூச்சமற்ற சுபாவம், திகிலுடன் கூடிய நடுக்கம், சிறிய செயற்பாடுகளிலும் ஈடுபடமுடியாதநிலை என்பன தோன்றி நரம்பு பாதிப்பு, விரக்தி, நா நடுக்கம், உடல் நடுக்கம், சோர்வு, ஆர்வமின்மை, தூகக்ப்பிரச்சினைகள், பதட்ட உணர்வு, 'கோச்சநால்' மனநோய், 'வேர்ணிக்ஸ்' மனக்குழப்பநோய் ஆகியவற்றை ஏற்படுத்தும்.

மேலும் உடலியல் ரீதியாக பார்க்கும்போது ஈரல் சம்பந்தமான நோய்கள், நோயெதிர்ப்பு சக்திக்குறைவு, நரம்புததொகுதி, சமிபாட்டுத்தொகுதிகளில் தாக்கம், இருதயநோய்கள் என்பன ஏற்படுகின்றன.

இப்படிப் பாவிப்போரின் வாழ்வை அடியோடு அழிக்கும் போதைவஸ்துகளை பயன்படுத்துவோருக்கு உடலியல் ரீதியான, உளவியல் ரீதியான சிகிச்சை முறைகள் உள்ளன.

### சிகிச்சை முறைகள்

போதைக்கு அடிமையான எவரையும படிப்படியாகவே குணமாக்க முடியும். முதலில் உடல்நிலையை சீராக்கிய பின்னரே போதை மீதுள்ள ஆவலை மாற்றியமைக்கும் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

போதைக்கு அடிமையான நபரின உடலில் போதைப்பொருள்களில் உள்ள நச்சுத்தன்மை பரவியிருக்கும். பொதுச்சுகாதாரத்தில் கீழான நிலையில் இருக்கும் அவர் போஷாக்கு மட்டத்தில் மிகவும் அடிநிலையைத் தழுவியவராகவும் உடல் உபாதைகளுக்கும், உடல் ரீதியான பாதிப்புக்களுக்கும் உள்ளாகியவராகவும் காணப்படுவார். எனவே, அவருக்கு உடல்ரீதியான சிகிச்சையே முதலில் அவசியமாகிறது. குறிப்பிட்ட ஒரு மருந்தை ஊசி மூலம் செலுத்துவதன் மூலம் போதைபபொருளை நுகர முற்படும் போதெல்லாம் உடலில் அசாதாரண நிலையினை உணர்வதோடு, வாந்தி எடுக்கும் நிலைக்கும் போதையாளர்கள் உள்ளாக்கப்படுவர்.

போதையாளரை முற்றாகக் குணபடுத்த உளவியல் ரீதியான சிகிச்சை மிகவும் முக்கியமானது. போதைப் பழக்கம் மனநிலை செயற்பாடுகளுடன் தொடர்புடையதாக இருப்பதால் இச்சிகிச்சைக்கு நீண்டகாலம் பிடிப்பது தவிர்க்க முடியாததே.

நோயாளிக்குக் கோபம், குற்றப் பழி உணர்வு, வெட்கம், பயம், தன்னைப் பற்றிய குறைமதிப்பீடு போன்றவறறை உருவாக்கி அது எப்படி உருவாகியது? அதற்குப் பரிகாரம் என்ன? என்பவற்றை விளக்க முற்பட அவ் விளக்கமே போதைப்பொருளை தவிர்ப்பதற்கான ஊக்கத்தை அவருக்கு அளிக்கும். போதைவஸ்தைப் பாவித்து அதன் தாக்கங்களுக்கு உள்ளானவரை சிகிசசைமுறையால் மீட்கலாம். ஆயினும, அவர் மீண்டும் போதைக்கு இடமளிககாது இருக்க அவரது குடும்பததவர்கள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அதிக அக்கறையும், ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்குவது அவசியம். அதுமட்டுமின்றி சமுதாயம அவரையும் இயல்பான மனிதராக மதித்து உற்சாகமூட்ட வேண்டும்.

போதையிலிருந்து மீண்டவர் தனிமை, வெறுமை போன்றவற்றை உணருவார். அவர் குடும்பத்தலைவராக இருந்தால் அவருககு மிகுந்த ஆதரவளித்து, நம்பிக்கையை ஊட்டி அருகிலிருந்து கவனிக்க வேண்டும். அவர் ஒரு பிள்ளையாக இருந்தால் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் அவசியமாவதுடன் பொழுது போக்கு அம்சங்களும் ஏற்படுத்தபபட வேண்டியது கட்டாயம் ஆகும்.

### போதையை ஒழிப்போம்

போதை என்பது அழிக்கப்பட வேண்டும் என்பது அனைவரும் உணர்ந்துகொண்ட உண்மை. போதையால் கண்ணீரில் மிதக்கும் குடும்பங்கள் ஏராளம். தற்கொலைகளும் தாராளம். பிரிவுகளும் அநேகம்.

ஆகவே, போதைவஸ்துக்களை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு, உளச்சுத்தியோடு செயற்பட்டால் போதையற்ற புதுவுலகம் என்றும் பொலிவோடு மிளிரும். ★


IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS

I B M S



Congratulations !!

IBMS DOUBLE + SCHOLARSHIP PROGRAM 2002/2003

போட்டிப் பரீட்சை முடிவுகள் உங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன

ACADEMY OF COMPUTING & ELECTRONICS (UNITED KINGDOM) & INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES

இணைந்து வழங்கும் கற்கைநெறி

Double Diploma Plus SLCDL.....

IBMS சான்றிதழுக்கு மேலதிகமாக Academy of Computing and Electronics நேரடியாக வழங்கும் U.K. சான்றிதழ்

வகுப்புகள் 08/06/2002 முதல்.

உங்கள் கற்கை நெறிகளை நீங்களே தீர்மானிக்க....
CAREER GUIDANCE SESSION 08-06-2002 10.00 a.m. இலிருந்து 30 நிமிட இடைவெளிகளில் அறிமுக வகுப்புகள் கட்டணம் எதுவுமின்றி.........

Institute of Business Management Studies
Head Office : No.701, K.K.S. Road, Jaffna.
Branches : Main Road, Chankanai, N.M.M.V. Road, Nelliyadi.
Phone :- 021 3165 EMail : ibms@sltnet.lk

ACTOS

IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS

உ

# புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்ரபானு வருஷம்
வைகாசித் திங்கள் 24ஆம் நாள் நாளை (07.06.2002) வெள்ளிக்கிழமை
முற்பகல் 11.00 மணிமுதல் 12.00 மணிவரை வரும் சுபவேளையில்



எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

## விநாயகர் இல்லம்

என்னும் புதுமனையில் பிரவேசஞ்செய்ய விநாயகர் திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
**சின்னத்தம்பி தங்கரட்ணம்**
**சின்னத்தம்பி ஜெயசுதன்**
(வெஸ்ரேண் மியூசிக் சென்ரர்)

*36,முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

✱ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (4537)

# பொன்விழா வாழ்த்து



எமது பேரன்புமிக்க பெற்றோர்களான

## திரு.திருமதி செபமாலை திரேசம்மா

தம்பதியினர்

இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணைந்த 50ஆவது ஆண்டின் நிறைவுப் பொன்விழா நாளான இன்று(06.06.2002) வியாழக்கிழமை முதலாக, எப்போதும் இன்றுபோல் என்றும் இன்பமாய் மகிழ்சியுடன் பல்லாண்டு காலம் நலமாய் நீடூழி வாழவேண்டுமென்று உளமார மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

*பொன்விழா நாயகனை வாழ்த்துவோர்:*
செ.சதாக்குமார் குடும்பம்,
செ.பிறேமசுதன் குடும்பம்,
செ.கீதபொன்கலன் குடும்பம்,
செ.அன்ரன் யூட் குடும்பம்,
அருள்திரு.செ.பிரான்சிஸ் ஜெயம
(செ.தா).

*35/1, டேவிட் றோட்,*
*யாழ்ப்பாணம்.*
(C/22405)

சுன்னாகம் வர்த்தக சமூகத்தின்

# கண்ணீர் அஞ்சலி

சக்தி பார்மஸி உரிமையாளரும்,
எமது வர்த்தக சங்க அங்கத்தவரும்,
வர்த்தக சங்கத்தின்
முன்னாள் தலைசிறந்த செயலாளருமாகிய

## சோ.அருணகிரிநாதன் (அரியம்)

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு சுன்னாகம் வர்த்தகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகம்
சுன்னாகம் வர்த்தகர் சங்கம்.

(4531)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25 - 08 - 1916



உதிர்வு 07 - 05 - 2002

## திருமதி செல்வமலர் ஆசைப்பிள்ளை

அன்புக்கோர் இலக்கணமாய்
அவனிதனில் வாழ்ந்தீர்!
பண்புக்கோர் உறைவிடமாய்
பாரினிலே திகழ்ந்தீர்!
உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*'இராஜஸ்தான்',*
*மானிப்பாய்.*
(4542)
- குடும்பத்தினர்.

# சைவசமய பாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்6

வடமராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவ பரிபாலன சபை ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு நாளை வெள்ளிகிழமை காலை 8.30 மணிமுதல் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தொடக்கவுரையையும், யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா நிறைவுரையையும் நிகழ்த்துவர்.

முன்னாள் அதிபர்களான சைவப் புலவர் சு.செல்லத்துரை, திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம், சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை மற்றும் பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் செல்வி அ.கந்தையா ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11வரையான வகுப்புக்களில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என சைவ பரிபாலனசபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவா வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

(எ-ரி)

# நிவாரண உணவு முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் வாழும் நிவாரணம் பெறுவோருககான உணவு முத்திரைகள் இன்று முதல் வழங்கப்படவுள்ளன.

தத்தமது பிரிவு கிராம அலுவலர்களிடம் உணவு முத்திரைகளைப் பொது மக்கள் பெற்றுக்கொள்ளலாம் என பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(எ-13-ரி)

★ ★ ★

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த நிவாரணம் பெறத்தகுதி பெற்றவர்களுக்கான உணவு முத்திரை விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு உணவு முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

நாளைமறுதினம் சனிக்கிழமைக்கு முன்னர் உணவு முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எக்காரணம் கொண்டும் பின்னர் அவை வழங்கப்படமாட்டாது என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

(எ-10)

# வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளி நிகழ்வில், நாளை வெள்ளிக்கிழமை 'அன்பின் வழியது உயிர் நிலை' என்னும் பொருளில் கரவெட்டி பிரதேச செயலகத்தின் சமுர்த்தி முகாமையாளர் ஆ.இரகுநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவார். அறிமுகவுரையை ஞான பண்டித இயலரசு கமுத்துவேலு நிகழ்த்துவார். (எ)

## நிறைஞ்சனாஸ்
சங்கானை
சுப்பர்ஸ்ரார் ரஜனி, நக்மா, ரகுவரன் மற்றும் பலர் நடித்த
**பாட்ஷா**
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22357)

## நாகம்ஸ் சுன்னாகம்
இளைய தளபதி விஜய், உலக அழக பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
**தமிழன்**
(சீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)
(4533)

## ராஜா யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா, கவுண்டமணி, செந்தில் நடித்த
**எஜமான்**
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
நாளை முதல **கள்ளழகர்**
(C/22356)

# Jaffna College Undergraduate Dept
**464, Hospital Rd., Jaffna.**

GAQ, B.A.(Part I), B.A. (Final)
**பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம்**
காலம்: 08.06.2002 சனிக்கிழமை

- ★ ஆங்கில இலக்கியம், மொழியியல் உட்பட சகல பாடங்களுக்குமான விரிவுரைகள்.
- ★ பல்கலைக்கழக பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்துதரப்படும்.
- ★ நூலக வசதி உண்டு.

**விசேட சிங்கள வகுப்புகள் ஆரம்பமாகின்றன**
*நாள்* : 08.06.2002 சனிக்கிழமை
*நேரம்* : 4.00p.m.
*ஆசிரியர்* : லீலாகிருஷ்ணன்

(C/22411) - பதிவாளர்.

# துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்
திரு.ப.அமிர்தலிங்கம்
அவர்களின் பாசமிகு தந்தையார்

## சின்னக்குட்டி பரமு

*(புத்தூர் கிழக்கு)*

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வலி.கிழக்கு, கோப்பாய்.

(4547)

# மரண அறிவித்தல்கள்

## இலகுப்பிள்ளை மார்க்கண்டு

*(முன்னாள் ஊழியர் - ப.நோ.கூ.சங்கம், சங்கானை)*

பண்ணாகத்தைச் சேர்ந்த இலகுப்பிள்ளை மார்க்கண்டு அவர்கள் 04.06.2002 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலகுப்பிள்ளை - நன்னிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் திருச்செல்வம் (உதயன் பணிமனை), காலஞ்சென்ற சந்திரசேகரன் (சந்திரன்), பத்மராஜா (அண்ணா தொழிலகம், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தேவகி (ஆசிரியை, வட்டு. மத்திய கல்லூரி) அவர்களின் அருமை மாமனாரும் கீர்த்தனா, தாரணி, சரண்யா ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பொன்னம்மா, சிதம்பரப்பிள்ளை மற்றும் தில்லையம்பலம், ஆறுமுகம், அன்னம்மா, அண்ணாமலை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2002) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.*
(4541)
தகவல்:
மா.திருச்செல்வம் (குட்டி)
(மகன்)

## சிவக்கொழுந்து நித்தியானந்தராஜா

(இ.போ.ச. முன்னாள் நடத்துநர்)

கொக்குவில் தலையாழியைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, தாவடிதெற்கை வதிவிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து நித்தியானந்தராஜா அவர்கள் 04.06.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அனந்தன் (லண்டன்), அகிலன் (லண்டன்), அனுசூயா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிஸ்கந்தராஜாவின் அன்பு மாமனாரும் நித்தியானந்தராணி, சத்தியானந்தராஜா (லண்டன்), காலஞ்சென்ற பரமானந்தராஜா, சத்தியானந்தராணி (பிரான்ஸ்), பரமானந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2002) வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*
(4540)
தகவல்:
இ. சிறிஸ்கந்தராஜா
(மருமகன்)

## செல்வன் மகேஸ்வரதாசன் சுதர்சன்

(நல்லூர் சாதனா பாடசாலை 10ஆம் ஆண்டு மாணவன்)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் றக்கா லேனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் மகேஸ்வரதாசன் சுதர்சன் 03.06.2002 திங்கட்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரதாசன் - யாழினி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், சிவசுதன், சுதர்சினி, சுபர்சனா, சுபந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2002) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*9/1,றக்கா லேன்,*
*சுண்டுக்குழி.*
(4543)
தகவல்:
ப. மகேஸ்வரதாசன்
(தந்தை)

# பேச்சுக்கு 10 தினங்கள் முன்னர் புலிகள் மீதான தடை நீக்கப்படும்

## கூட்டமைப்பினரிடம் பிரதமர் உறுதி

கொழும்பு,ஜூன்6

விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு பத்து தினங்கள் முன்பாக அந்த அமைப்பு மீதான தடையை நீக்குவது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் நேற்றுக்காலை இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர்களிடம் இந்த உறுதிமொழியைப் பிரதமர் வழங்கினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகள், முன்னேற்றங்கள் ஆகியன தொடர்பாக விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கும்படி பிரதமர் கூட்டமைப்பிடம் கோரினார்.

அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மீண்டும் சந்தித்து அது பற்றி ஆராயலாம் என்றும் பிரதமர் கூட்டமைப்பினரிடம் கூறினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், ஒப்பந்தம் கைச்சாத்தான நாளிலிருந்து 160 நாள்களுக்குள் சகல சரத்துக்களும் நிறைவேற்றப்படவேண்டும். தற்போது 100 நாள்கள் முடிவடைந்திருக்கின்றன. மிகுதி 60 நாள்களில் சகல பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு, ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். இது உறுதி என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமரின் அழைப்பின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்.சம்பந்தன், வீ.ஆனந்தசங்கரி, ஜோசப் பரராஜசிங்கம், அ.சந்திரநேரு, தங்கவடிவேல், கிருஷ்ணமூர்த்தி (வெள்ளிமலை), அ.விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

பிரதமர் தனது ஐரோப்பிய மற்றும் லண்டன் விஜயம் பற்றி தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விவரித்தார். (ஐ-3-4)

# பிரதி சபாநாயகராகவும் பதவி வகித்தவர் சிவா!

சுமார் 18 ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர் தலைவர் சிவசிதம்பரம். உப-சபாநாயகர் பதவியும் அவரை நாடி வந்தது. 1965இல் அமைக்கப்பட்ட பிரதமர் டட்லி சேனநாயக்காவின் அரசில் பிரதி சபாநாயகராகப் பதவி வகித்தார். சபாநாயகராக இருந்த சேர். அல்பேட் பீரிஸ் காலமானதை அடுத்து சேர்லி கொரியா சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டபோது சிவசிதம்பரம் உப-சபாநாயகராகத் தெரிவானார்.

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் இணைந்து தமது அரசியல் வாழ்வை ஆரம்பித்த சிவசிதம்பரம், 1960ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மூலம் முதன்முதலாக நாடாளுமன்றம் பிரவேசித்தார். (ஐ)

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பொலீஸ் நிலையத்தில் இன்று ஆஜராகி ரஞ்சித் டி சில்வாவிடம் சமர்ப்பிக்கும்படி மணிபல்லவராஜனுக்கு உத்தரவிட்டார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான கந்தசாமி ஜெகதீஸ்வரன்(ஜெகன்), பசுபதிப்பிள்ளை கேதீஸ்வரன்(விசு), ஈ.பி.டி.பி. யாழ்.அலுவலக வாகனப் பொறுப்பாளர் விஸ்வன் ஆகியோரை ரஞ்சித் டி சில்வா முன் இன்று ஆஜராக ஏற்பாடு செய்யும்படியும் மணிபல்லவராஜனுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான விசாரணை அறிக்கையை நாளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி ரஞ்சித் டி சில்வாவிடம் நீதிவான் கேட்டுக்கொண்டார். (ஐ-3-8-10)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் ஒவ்வொருவரும் பெருமை அடைகின்றனர். அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டபோது, இனத்தின் விடுதலைக்காக அஹிம்சைப் போராட்டம், ஆயுத வழிப் போராட்டம் ஆகியவற்றை இந்த மாணவ சமுதாயமே முன்னெடுத்தது. இன்று கட்டியெழுப்பப்பட்ட தேசத்தின் விடுதலை உணர்வுகள் போராட்டத்தில் தம்மை ஆகுதி ஆக்கிய மாணவ விழுதுகளால் உருவாக்கப்பட்டவை" ஆகும்.

விடுதலை உணர்வை - சுதந்திரக்காற்றை - இந்த மண்ணில் உலாவ விட்ட தியாகி பொன். சிவகுமாரனின் தியாகத்தைப் போற்றுகின்ற அதே வேளை, உணர்வுமிக்க, உறுதிமிக்க மாணவர்களாக விடுதலையின் வேர்களை இறுக்கிக்கொள்வோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9.30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறும். சகல மாணவர்களையும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-10-8-173-ரி)

## மூத்த தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த அவர், கடந்த 30 ஆம் திகதி சிறுநீரகக் கோளாறால் பாதிக்கப்பட்டு இரவு 9.30 மணியளவில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சையளிக்கப்பட்டுவந்தபோதிலும் நேற்று முன்தினம் பிற்பகல் அவரின் உடல் நிலை திடீரென மோசமடையத் தொடங்கியது. பின்னர் அவர் மயக்க நிலைக்கு உள்ளானார். நேற்று அதிகாலை 1.15 மணியளவில் அவரது உயிர் பிரிந்தது.

நேற்று மாலை முதல் அன்னாரின் புகழுடல் திம்பிரிகஸ்யாயவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கிறது. பெரும் எண்ணிக்கையில் மக்கள் அஞ்சலி செலுத்துகின்றனர். நாளை காலை புகழுடல் கண்டி வீதி வழியாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும்.

யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் வெள்ளி மாலை முதல் சனிக்கிழமை காலை வரை பொதுமக்கள் அஞ்சலிக்கு புகழுடல் வைக்கப்பட்டிருக்கும். பின்னர் அவரது சொந்த ஊரான கரவெட்டிக்கு புகழுடல் எடுத்துச்செல்லப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை காலை கரவெட்டியில் அன்னாரின் இறுதிக்கிரியைகள் நடைபெறும். புகழுடல் பின்னர் அன்னாரது குடும்ப மயானமான சோனப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணி, எம்.பி. பதவிகளைத் துறந்தபொழுது சிவசிதம்பரமும் எம்.பி. பதவியைத் துறந்தார்.

பின்னர் தமிழ்நாடு சென்று தங்கிய அவர், நாடாளுமன்ற அரசியலில் ஈடுபடவில்லை. எவ்வாறாயினும் 2001ஆம்ஆண்டு டிசெம்பர் தேர்தலை அடுத்து அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்டார். இவ்வாண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி கொழும்பு திரும்பிய சிவசிதம்பரம், எம்.பியாகப் பதவியேற்றார்.

அமரர் சிவசிதம்பரத்தின் இறுதி நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக அவரது துணைவியாரும் மகளும் இந்தியாவில் இருந்து இன்று கொழும்பு வருகின்றனர். மகன் சத்தியேந்திரா லண்டனில் இருந்து நாளை கொழும்பு வருகிறார்.

இறுதிக்கிரியைகளில் பங்குபற்றுவதற்காக திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா.ஜனார்த்தனன் ஆகியோர் இன்று கொழும்பு வர விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-4-8)

## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்திலும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

சிவசிதம்பரத்தின் மறைவுச் செய்தி குடாநாட்டு மக்கள் மத்தியில் சோக உணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. பொது இடங்களில் பொதுமக்கள் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு வருகின்றனர். கூட்டணி அலுவலகங்களுக்குச் செல்லும் மக்கள் தங்கள் அனுதாபத்தைத் தெரிவிப்பதைக் காணமுடிந்தது.(ஐ-8-10-173)

## வாழ்க்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிபெற்றார்.

★ 1970ஆம் ஆண்டு உடுப்பிட்டித் தொகுதியில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஜெயக்கொடியிடம் தோற்றார்.

★ 1972ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் உருவான தமிழர் விடுதலைக் கூட்டணியின் இணைச் செயலாளராக அமரர் அமிர்தலிங்கத்துடன் இணைந்து செயற்பட்டார்.

★ கூட்டணியின் மூத்த தலைவர்களான எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகியோரின் மறைவுக்குப் பின்னர் கூட்டணியின் தலைவராக இறக்கும்வரை இருந்தார்.

★ 1977 ஆம் ஆண்டு நல்லூர் தொகுதியில் கூட்டணி சார்பில்போட்டியிட்டு 28,137 மேலதிக வாக்குகள் பெற்று தனிப்பெரும்பான்மையுடன் வென்றார்.

★ 1989ஆம் ஆண்டு அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் காயமடைந்து அமெரிக்காவில் சிகிச்சை பெற்றார். பின்னர் இந்தியாவில் தங்கியிருந்தவாறு கட்சியின் செயற்பாடுகளுக்கு ஆலோசனை வழங்கி வந்தார். (ஐ-3)


எமது புதிய வீடியோCD வெளியீடு
பிரபுதேவாவின்
ஒன் ரு திறி
ITN பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி. (C/22417)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
சுரேஷ்கோபி நடித்த
மிஸ்டர் தேவா
உடன் பிரதிகள் பெறலாம்.
வீடியோ சிந்து
உரும்பிராய். (4550)

சயன்ஸ் சென்ரர்
நெல்லியடி
A/L 2003
அலகு ரீதியான மீட்டல்
வினா - விடை வகுப்பு
ஆரம்பம்: 07.06.2002
(வெள்ளி) 4.00 p.m
இரசாயனவியல்
ஆசிரியர்: திரு.சிவத்திரன்
குறிப்பு:- எழுதுவினைஞர் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- நிர்வாகி (C/22406)

திருமண நாள் வாழ்த்து
இல்லற வாழ்வில் இன்று (06.06.2002) வியாழக்கிழமை
அடி எடுத்து வைக்கும் எமது அன்பு நண்பர்களான
திரு.திருமதி லலீசன் ~ கவிதா
தம்பதியினரை
இறை அருளால் சகல செல்வங்களும் பெற்று
நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.
கோப்பாய், நீர்வேலி. (C/22407) - அன்பு நண்பர்கள்.

எமது புதிய வீடியோCD வெளியீடு
சுரேஷ்கோபியின்
Mr.தேவா
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/22416)

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான
பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம் : 08.06.2002 (3p.m.)
எமது வழமையான ஆசிரியர் குழு.
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (4528)

உ
சிவமயம்
புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு
அன்புடையீர்!
நிகழும் சித்திரபானு வருஷம் வைகாசித் திங்கள் 23ஆம் நாள் இன்று (06.06.2002)
வியாழக்கிழமை முற்பகல் 10.53 மணிக்கும் 12.41 மணிக்கும் இடையில் வரும்
சுபவேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

S.P.M. ஓவ்(F) செற் பிறின்ரேர்ஸ்
S.P.M. OFFSET PRINTERS
எனும் ஸ்தாபனத்தை இல.256, பிரதான வீதி, பருத்தித்துறையில் திறந்து வைக்கவுள்ளதால் அத்தருணம்
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள், உறவினர்கள் அனைவரும்
வருகைதந்து இவ்விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
256,பிரதான வீதி, பருத்தித்துறை. (4529)
S.புவனேஸ்வரன் (உரிமையாளர்)


## மரண அறிவித்தல்

### கிருஷ்ணபிள்ளை பொன்னுத்துரை

(உரிமையாளர் - ஈஸ்வரி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை பொன்னுத்துரை அவர்கள் 04.06.2002 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் கிருஷ்ணபிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவகுமார் (பிரான்ஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்), சிவனேஸ்வரி (இந்தியா), ஜெயக்குமார் (பிரான்ஸ்), ஞானேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஷாலினி, உஷா, சிவராஜா, விஜேஸ்வரி, பிரதாபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷாந்தன், ஜனனி, ஜினோஷன், ஜதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மான்ஸ் பாடசாலை லேன், உடுவில், சுன்னாகம்.* (4525)

தகவல்: செ.செல்வநாயகி (மருமகள்)

### கந்தையா யோகராசா

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி கிழக்கு, கிழவிதோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா யோகராசா (ஓய்வு பெற்ற கூட்டுறவு பரிசோதகர்) அவர்கள் நேற்று (05.06.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சுதாகரன் (ஆசிரியர் கண்டி, வத்தேகம), விதுவாகரன் (பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), சுகிதாஜினி, சதீஸ்கரன், சுகந்தாஜினி (மாணவி, வட. இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், யசோதாவின் மாமனாரும் யதுர்சனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பூ மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிழவிதோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (4551)

தகவல்: விதுவாகரன் (மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.